பக்கங்கள்: 09

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 ஆவணி 02 சனிக்கிழமை 19.08.2023 கதிர் 281

# மாகாண நிபுணர் குழுக்கள் ரணிலின் ஏமாற்று வித்தை

## கருணாகரன் எம்.பி. சாடல்

(ந.லோகதயாளன்)

மாகாண சபைகளுக்கு அதிகாரங்களைப் பரவலாக்குவதற்கு ஒரு நிபுணர் குழுவை ஜனாதிபதி நியமிப்பதென்பது இந்தநாட்டுமக்களைமாத்திரமல்லாமல் சர்வதேசத்தையும், குறிப்பாக இந்தியாவை ஏமாற்றும் செயல்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்நாடாளுமன்றஉறுப்பினரும், தமிழீழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் நாயகமுமான கோவிந்தன் கருணாகரன் (ஜனா) தெரிவித்தார்.

மட்டக்களப்பில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்து அவர் இதனைத் தெரிவித்தார்,

இலங்கையில் மாத்திரமல்ல உலகத் தமிழர்கள் மத்தியிலும் இன்று பேசுபொருளாக மாறியிருக்கின்ற விடயம் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தினூடாகக் கொண்டு வரப்பட்ட 13ஆவது திருத்தச்சட்டம்.இதுகொண்டுவரப்பட்டு 36 ஆண்டுகள் கடந்திருந்தாலும் ☞2

## இது ரகசியம் அல்ல!

ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக்கியபோதும் ஆட்சி தம்மிடம்தான் இருக்கிறது என்பதில் ராஜபக்சக்களின் மொட்டுக் கட்சி தெளிவாக இருக்கின்றது. இதனால் தேர்தல்களை இலக்கு வைத்து ரணில் மேற்கொள்ளும் நகர்வுகளுக்கு முட்டுக்கட்டை போடும் நடவடிக்கையில் அது தற்போது ஈடுபட்டுள்ளது.

கட்சியின் தலைவர்கள் இது விடயத்தில் அமைதி காத்தாலும் அடுத்த மட்டத் தலைவர்கள் ரணிலை எதிர்த்து அரசியல் செய்வதன் மூலமே மொட்டு இழந்துபோன செல்வாக்கை மீளப்பெற முடியும் என்று கருதுகின்றனர். அதனால் ரணிலின் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் நிலைப்பாட்டை நாமல் ராஜபக்ச மற்றும் கட்சிச் செயலாளர் சாகர காரியவாசம் போன்றவர்கள் முன்னெடுக்கின்றனர்.

அரசமைப்பின் 13ஆவது திருத்தம் தொடர்பானரணிலின்அறிவிப்புஇதற்குவாய்ப்பாகப் போய்விட்டது. நாடாளுமன்றத்தில் முன்னர் தமது கட்சியின் மூத்த தலைவர் மகிந்த ராஜபக்ச அறிவித்ததற்கு மாறாக 13ஐ இப்போது நடைமுறைப்படுத்த ☞2

# ஜே.வி.பி. கட்சி மீதான குற்றச்சாட்டு பெய்யாம்

ஜே.வி.பிக்கு அமைச்சர் டிரான் அலஸுடன் தொடர்பு இருப்பதாகவும் அவருடன் இணைந்து ஐரோப்பாவில் தீவொன்றை கொள்வனவு செய்துள்ளதாகவும் சுமத்தப்பட்டு குற்றச்சாட்டை நிராகரிப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

மக்கள் விடுதலை முன்னணி, அமைச்சர் டிரான் அலஸுடன் இணைந்து ஐரோப்பாவில் தீவு ஒன்றை கொள்வனவு செய்ய பணத்தை முதலீடு செய்துள்ளதாக முன்னிலை சோசலிசக்கட்சியின் பிரசார செயலாளர் துமிந்த நாகமுவ அண்மையில் கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கூறியிருந்தார்.

இக்குற்றச்சாட்டு தொடர்பில் கருத்து தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு ☞2

## உள்ளூராட்சி, மாகாணம் மற்றும் மத்தி

# மூன்று ஆட்சி அதிகார மட்டங்களையும் மையப்படுத்தி புதிய பொறிமுறை தேவை

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்து

உள்ளூராட்சி சபை, மாகாண சபை மற்றும் மத்திய அரசு ஆகிய மூன்று பிரிவுகளிலும் சேவைகள் வழங்குவதில் ஏற்படும் பண விரயத்தைத் தவிர்க்க, இந்த மூன்று பொறிமுறைகளின் செயற்பாடுகளையும் மையப்படுத்தி, புதிய பொறிமுறையொன்றைத் தயாரிக்க நடவடிக்கை எடுத்திருப்பதாக ஜனாதிபதிரணில்விக்ரமசிங்க தெரிவித்தார்.

மாகாண ஆளுநர்களுடனும் பிரதம செயலாளர்களுடனும் கலந்தாலோசித்து, ஒரு மாத காலத்திற்குள் இது தொடர்பான அறிக்கையைத் தயாரிக்குமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார் ☞2

# மோடி அரசு துரோகமிழைக்கிறது கச்சதீவை மீட்டெடுத்தே தீருவோம்

## இராமேஸ்வரத்தில் ஸ்ராலின் சூளுரை

(ந.லோகதயாளன்)

தமிழ்நாட்டுக்கு மோடி அரசுதுரோகம்செய்துவருகின்றதுகச்சத்தீவை இலங்கையிடமிருந்துமீட்டுதமிழ்நாட்டு மீனவர்களின் உரிமையை நிலைநாட்டப்படும் எனதமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்ராலின் இராமேஸ்வரத்தில் நேற்றுத் தெரிவித்துள்ளார்.

இராமநாதபுரம் மாவட்டம்ஈராமேஸ்வரத்தைஅடுத்த மண்டபம் பகுதியில் அமைந்துள்ள இலங்கைத் தமிழர் முகாம்அருகேநேற்று மீனவர் மாநாடு நடைபெற்றது. இதில் தமிழ்நாட்டின் கடலோரப் பகுதியிலான 14 மாவட்டங்களில்இருந்தும்பலஆயிரக்கணக்கான மீனவர்கள் கலந்துகொண்டனர். நிகழ்வில் உரையாற்றிய தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்ராலின் தெரிவித்ததாவது:

தமிழகத்தில் இனி வரும் மீன்பிடித் தடைக் காலத்தில் நிவாரணத் தொகை, 5 ஆயிரத்தில் இருந்து 8 ஆயிரமாக உயர்த்தப்படும்.

1076 கி.மீ. நீளமான கடற்கரையை கொண்டமாநிலம் நம் தமிழ்நாடு. வகைவகையாககடலில்கலம்செலுத்தியவர்கள் தமிழர்கள். தமிழ்நாட்டைஉலகத்தோடு இணைத்தது ☞2

# மாகாண அதிகாரப் பகிர்வு தொடர்பில் பொது ஜன பெரமுன இரட்டை வேடம்

## அக்கட்சி எம்.பி. நிமல் லன்ஸா தெரிவிப்பு

மாகாணங்களுக்கு அதிகாரங்களை பகிர்வது தொடர்பான விடயத்தில் ஸ்ரீலங்காபொதுஜனபெரமுன இரட்டை நிலைப்பாட்டை கையாண்டுவருவதாக நாடாளுமன்ற உறுப்பினர் நிமல் லன்சா தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு வெளியிட்டுள்ள விசேட அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அரசமைப்புச்சட்டத்தின் 13ஆவது திருத்தச்சட்டத்தை நடைமுறைப்படுத்தி நாட்டின் அனைத்து மக்களும் ஏற்றுக்கொள்ளக் கூடிய வேலைத்திட்டம் ஒன்றை உருவாக்க முயற்சிக்கும் போது அதனை எதிர்க்க பொதுஜன பெரமுனவுக்கு தார்மீக உரிமையில்லை.

13ஆவது திருத்தச்சட்டத்திற்கு அப்பால் சென்ற தீர்வுக்கு கூட செல்லலாம் என்பது பொதுஜன பெரமுனவின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மஹிந்தராஜபக்ஷவின்நிலைப்பாடாகும். 13ஆவது திருத்தச்சட்டம் ஏற்கனவே அரசியலமைப்புச்சட்டத்தில்உள்ளடக்கப்பட்டுள்ளது.

இதன் கீழ் நாட்டின் அனைத்து மக்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அதிகார பகிர்வைவழங்கதற்போதைய ஜனாதிபதி ரணில் ☞2

# வேலைதேடிப் பறப்போர் தொகை 154 சதவீதமான 2022இல் உயர்வு

வெளிநாட்டு வேலைக்கான புறப்பாடுகள் கடந்த ஆண்டு 154.4 சதவீத என்ற கணிசமான அதிகரிப்பைப் பதிவுசெய்துள்ளதாகஇலங்கை மத்திய வங்கியின் 2022 வருடாந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில்மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

2021ஆம் ஆண்டு 122,264 ஆக இருந்த வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்கான புறப்பாடுகள் 2022 ஆம் ஆண்டு 311,056ஆக குறிப்பிடத்தக்கவளர்ச்சியைப் பதிவு செய்துள்ளன.

2022ஆம் ☞2

# தமிழ் இளைஞர் கொழும்பில் நேற்று அடித்துப் படுகொலை

கொழும்பில்தமிழ்இளைஞர் ஒருவர் அடித்துப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச்சம்பவம்கொழும்பு-மோதரையில்நேற்றுமாலை இடம்பெற்றுள்ளது.

வவுனியாவைச் சேர்ந்தவரும் வெல்லம்பிட்டியில் வசிப்பவருமான அருணாசலம் அஜந்தன் (வயது 24) என்ற இளைஞரே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பில் கடந்த 5 வருடங்களாகக் ☞2

# கோப்பாய், சண்டிலிப்பாய் பகுதி பிரதேச செயலர்களுக்கு விருது




(ந.லோகதயாளன் )

ட்ரான்ஸ்பேரன்சிஇன்டர்நெஷனல் ஸ்ரீ லங்கா நிறுவனத்தின் 2022, 2023ஆம் ஆண்டுக்கான நேர்மைக்கு மகுடம் விருதில் இம்முறை கோப்பாய், சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர்கள் உட்பட ஐவருக்கு வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் புதன்கிழமை இடம்பெற்ற நிகழ்வில், நேர்மையுடனும் அர்ப்பணிப்புடனும் சிறந்த விழுமியங்களை கடைப்பிடித்து பொதுமக்களுக்கு சேவையாற்றும் அரச ஊழியர்களுக்கு விருது வழங்கப்பட்டது.

பொதுமக்களுக்குச் சேவை வழங்குவதை முதன்மையாகக் கொண்டு நேர்மையாகவும் தமது கடமைகளுக்குமேலதிகமாக தம்மை அர்ப்பணித்தும் பணியாற்றும் அரச ஊழியர்களை கண்டறியும் நேர்மைக்கு மகுடம் செயற்திட்டத்தினைஎக்கவுண்டபிலிட்டிலெப் நிறுவனத்துடன் இணைந்து ஐந்தாவது முறையாக இந்த நிறுவனம் ஏற்பாடு செய்திருந்தது.

நேர்மைக்கு மகுடம் எனும் நேர்மையான அரச ஊழியர்களுக்கு விருது வழங்கும் முயற்சியானது நேபாளத்தில்ஆரம்பிக்கப்பட்டு பின்னர் இலங்கை உட்பட 12 நாடுகள் இவ்விருது வழங்கும் செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்நிகழ்வின் போது சிறந்த ஐந்து அரச ஊழியர்களுக்கு இந்த நேர்மைக்கு மகுடம் 2022/23 விருதினை வழங்கிகௌரவிக்கப் பட்டனர்.

1. சுபாஜினி மதியழகன் - பிரதேச செயலாளர், பிரதேச செயலகம் - வலிகாமம் ☞2

# தமிழரின் இருப்பும் எதிர்காலமும் பெரும் கேள்விக்குள்ளாகியுள்ளன

## குருந்தூர்மலையில் சிறீதரன் எம்.பி. காட்டம்

(ந.லோகதயாளன்.)

தொல்பொருள் என்பது அடையாளமாக வைத்து பார்க்கவேண்டியது அந்த இடத்தில் விகாரை கட்டப்பட வேண்டிய இடமல்ல இங்கு சிங்களமக்களுக்குஒருசட்டம் தமிழர்களுக்கு ஒரு சட்டம் என்கிற ஆக்கிரமிப்பு நிலையினைத்தான் பார்க்கின்றோம். இது தமிழர்களின் இருப்பினையும் எதிர்கால வாழ்வையும்மிகப்பெரியகேள்விக்குட்படுத்தியுள்ளது. எனவே அவற்றைப் பாதுகாக்க குருந்தூர்மலையில் மாதா மாதம்பொங்கல்நடைபெறும்.

இவ்வாறு நேற்று குருந்தூர்மலையில்நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் எரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டம், குருந்தூர் மலையில் அமைந்துள்ள ஆதி சிவன் ஐயனார் ஆலய பொங்கல் நிகழ்வில் கலந்துகொண்ட பின்னர் அவர் ஊடகங்களுக்குக்கருத்து தெரித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

மிகப்பெரிய அடாவடிகளுக்குமத்தியில், குவிக்கப்பட்ட பொலிஸார் சிறப்பு அதிரடிப்படையினருக்குமத்தியில், குருந்தூர்மலையினை ஆக்கிரமித்திருக்கின்ற பிக்குவின் அடாவடிகள் ஆக்கிரமிப்புக்களுக்கு மத்தியில் பொங்கல் நிகழ்வு எல்லோரின் ஒத்துழைப்புடனும் நடைபெற்றுள்ளது.

தடைகள் பல இருந்தும் அவற்றைத் தாண்டி நீதியின் பக்கம் நின்ற முல்லைத்தீவு மாவட்டநீதித்துறையினுடைய நியாயமான கரிசனைகள் எண்ணத்தில் எடுக்கப்பட்டு நேர்மையாகவும் நேர்த்தியாகவும் நடைபெற்ற இந்தப் பொங்கலுக்காக எல்லோருக்கும் நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளோம்.

தமிழர்கள் ஆதிகாலம் தொட்டு அடையாளமாக வாழ்ந்து வந்த குருந்தூர் மலையிலே அவர்களின் இருப்பினை இல்லாமல் செய்து இதனை ஒரு பௌத்த பிக்கு ஆக்கிரமித்து விகாரை அமைத்துள்ளார் ☞2

# உள்ளூராட்சி மன்றங்களில் 25% இடம் இளையோருக்கு

## விரைவில் வருகிறது சட்டமூலம்

உள்ளூராட்சி மன்றங்களில் 25சதவீத இளைஞர் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்தும் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட இருப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் பிரேமநாத் சி. தொலவத்த தெரிவித்தார்.

இலங்கையில் நீண்டகாலமாக இருந்து வந்த ஆனால் கடந்த காலத்தில் இழந்த அந்த வாய்ப்பை மீண்டும் இளைஞர்களுக்கு வழங்குவதே இதன் நோக்கமாகும் எனவும் அதற்காக அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவும் பெறப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடகமையத்தில்நேற்றுசெய்தியாளர்களிடம் பேசும்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்நாட்டு இளைஞர்களுக்கு வாய்ப்பு வழங்குவதும், தீர்மானம் எடுக்கும் செயற்பாட்டில் இளைஞர் பிரதிநிதித்துவத்திற்கான வாய்ப்புகளை வழங்குவதும் ஜனாதிபதியின் வேலைத்திட்டம்எனவும்நாடாளு ☞2

## இனி இது .....

வேண்டியஅவசியம்இல்லை என்ற நிலைப்பாட்டை அந்தக் கட்சி எடுத்துப் பதிவு செய்துள்ளது.

இந்தப் பின்னணியில் மொட்டுக் கட்சியின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்சவிற்கும் ஜனாதிபதிக்கும் இடையில் இன்று முக்கியமான சந்திப்பு ஒன்று இடம்பெறவுள்ளது. இந்தக் கூட்டத்தில் மொட்டுக் கட்சியின் சார்பில் உள்ளூராட்சி சபைகளின் முன்னாள் தலைவர்களாக இருந்தவர்களும் கலந்துகொள்ளவுள்ளனர்.

மொட்டுக்கட்சியின்கோரிக்கையின் பேரிலேயே இந்தக் கூட்டத்திற்குத் திகதி குறிக்கப்பட்டிருக்கின்றது.உள்ளூராட்சி மன்றங்களின் முன்னாள் தலைவர்களின் பிரச்சினைகள் குறித்து இந்தக் கூட்டத்தில் ஆராயப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றபோதும்ரணிலுடனான பிரச்சினைகள் குறித்து மிக முக்கியமாகப் பேசப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

....................

நாடாளுமன்றத்தின் குழு அறையில் ஒரு மெத்தையும் இரு தலையணைகளும் இருந்துகண்டெடுக்கப்பட்டன என்று செய்திகள் வெளியாகி இருந்தமைதொடர்பில்நேற்று தகவல் தெரிவித்திருந்தேன். நாடாளுமன்றத்தின் சுத்திகரிப்புப் பணியில் ஈடுபடும் அழகிய இளம் பெண்கள் பாலியல் தொல்லைகளுக்கு உள்ளாக்கப்பட்டது தொடர்பாக விசாரணை நடத்திவரும் குழுவினரின் நடவடிக்கையின்போது இவை கண்டுபிடிக்கப்பட்டனஎன்பது பரபரப்பான செய்தியாக நேற்று சிங்கள மற்றும் சில ஆங்கில ஊடகங்களில் வெளியாகி இருந்தது. அதனையே நானும் குறிப்பிட்டிருந்தேன்.

ஆனால், அப்படிமெத்தை, தலையணைகள் எவையும் கண்டுபிடிக்கப்படவில்லை, அது சுத்தப் பொய் என்று அறிவித்திருக்கிறார் நாடாளுமன்றத்தின் செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் இது தொடர்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நாடாளுமன்றப் பராமரிப்புப் பிரிவு தொடர்பில் 2023 ஜூலை 30 ஆம் திகதி மற்றும் அதனை அண்மித்த திகதிகளில் வெளியிடப்பட்ட ஊடக செய்திகள் குறித்து ஆரம்பகட்ட விசாரணைகளை நடத்துவதற்கு சிரேஷ்ட அதிகாரிகள் மூவரைக் கொண்ட குழு நியமிக்கப்பட்டு இக்குழு தற்பொழுது விசாரணைகளை மேற்கொள்கிறது.

குறிப்பிட்ட சம்பவம் தொடர்பில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள பணியாளர் பணியிடைநீக்கம் செய்யப்பட்டிருப்பதுடன் நாடாளுமன்ற பணியாளர்களுக்குக்குறிப்பிட்ட குழுவின் முன்னிலையில் நேரில் அல்லது தொலைபேசி மூலம் அல்லது மின்னஞ்சல் மூலம் விடயங்களைத் தெரிவிப்பதற்கான வாய்ப்புக்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன.

இந்தக் குழுவுக்கு மேலதிகமாக குறிப்பிட்ட சம்பவம் தொடர்பில் நாடாளுமன்ற செயலாளர் நாயகம் அல்லது உதவிச் செயலாளர் நாயகத்தைச் சந்தித்து தகவல்களை முன்வைக்க முடியும்எனஉள்ளகசுற்றறிக்கையின் ஊடாக அறிவிக்கப்பட்டிருக்கிறன்றது.

தற்பொழுது இந்தக் குழுவின் விசாரணைகள் பக்கச்சார்பற்ற நிலையில் இடம்பெற்று வருகின்றன. ஏதாவதொரு அதிகாரிக்கு எதிரான குற்றச்சாட்டு நிரூபிக்கப்படும்சந்தர்ப்பத்தில் அவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

அதற்கிடையில் நாடாளுமன்றக் குழு அறையில் மெத்தை மற்றும் தலையணைகள் கண்டெடுக்கப்பட்டதாக வெளியான செய்திகளில் உண்மை எதுவும் இல்லை - என்றுள்ளது.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## மாகாண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை அரசமைப்பிலிருக்கும்இந்தச்சட்டம்இன்னும் முழுமையாக அமுல்படுத்தப்படாமல் இருக் கின்றது. அந்தவகையில்இந்தநாட்டில் மாறி மாறி ஆட்சியைக் கைப்பற்றி ஆண்டுகொண்டிருக்கும்கட்சிகளும், தலைவர்களும் இலங்கையின் அரசமைப்பையேமீறி, சட்டவிரோதமான நடவடிக்கையைச் செய்துகொண்டிருக்கின்றன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 13ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக நிறைவேற்ற நாடாளுமன்றத்தின்அனுமதிபெறப்பட வேண்டும் என்கிறார். உண்மையிலேயே அன்று 1987இல்6இல்5பெரும்பான்மையைக் கொண்ட நாடாளுமன்றத்திலேதான் இந்த 13ஆவது திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் அவர்கள் உட்பட அக்கட்சியின் தமிழ் நாடாளுமன்றஉறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் இருக்காத நிலையில், சிங்கப் பிரதிநிதிகளை மாத்திரம் வைத்தே 6இல்5பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்டது 13. அதனைமீண்டும்ஒருதடவை நாடாளுமன்றத்திற்குக் கொண்டுபோக வேண்டிய தேவை இருக்காது.

13ஆவது திருத்தச் சட்டத்தை நாடாளுமன்றத்திற்குக் கொண்டுவந்து சிங்கள மக்கள் மத்தியில் இன்று செல்லாக் காசாக இருக்கும் அரசியல்வாதிகளைத் தட்டியெழுப்பி இனங்களுக்கிடையிலே மேதலை, முறுகலை ஏற்படுத்தி மீண்டும் ஓர் இனக்கலவரத்தை உருவாக்கும் சூழ்நிலைஜனாதிபதிகொண்டு வந்திருக்கின்றார்.

அது மாத்திரமல்லாமல் தற்போது 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக இல்லாதொழிக்க வேண்டும் என்றும்சிங்களஇனவாதிகள் கூறுகின்றார்கள். 13ஆவது திருத்தச்சட்டத்தையும்அதனூடாக ஏற்படுத்தப்பட்ட மாகாணசபை முறைமையையும் இல்லாதொழிப்பதற்கானசட்டத்தைஅவர்கள் நாடாளுமன்றத்திலே கொண்டுவரட்டும் அதற்குப் பின்னர் இந்த நாடு எந்த நிலைமைக்குச்செல்கின்றது என்பதை அவர்களே உணர்ந்துகொள்வார்கள்.

இந்தப் 13ஆவது திருத்தச் சட்டத்தினூடாகக் கொண்டுவரப்பட்ட மாகாணசபைத் தேர்தலை நடத்தாது ஜனாதிபதி நீண்ட காலமாகஇழுத்தடிப்பதென்பது ஏற்றுக்கொள்ளமுடியாதது. ஒரு ஜனநாயக நாட்டிலே மக்கள் தங்களை ஆளக் கூடிய பிரதிநிதிகளைத் தெரிந்தெடுக்கவேண்டும். ஆனால், மாகாணசபைத் தேர்தலை நடத்தாது மாகாணசபைகளுக்கு நிபுனர்குழுவை அமைப்பதற்கு ஜனாதிபதி முயற்சிக்;கின்றார். அதற்கு முன்னாள் வடமாகாண முதலமைச்சர் சீ.வி.விக்னேஸ்வரன் உட்படச் சிலர் ஒத்துழைப்பு வழங்குகின்றனர்.

மாகாண சபைகளுக்கு நிபுனர் குழுவை அமைப்பதென்பது மாகாணசபைத் தேர்தலைப் பிற்போடுவதற்கான தந்திரமே ஒழிய இதன் மூலம் வேறு எதனையுமே சாதிக்க முடியாது. மாகாணத்திற்கும், மத்திக்கும் இடையிலான அதிகாரங்களை எவ்வாறு பகிர்வது என்பது தெடர்பில்ஆராய்வதற்காகவே இந்த மாகாண நிபுனர் குழுவை அமைப்பதாகக் கூறுகின்றார்கள்.13ஆவது திருத்தச் சட்டத்திலே அதிகாரங்கள் குறித்து விரிவாகக் கூறப்பட்டுள்ளது. பொலிஸ் அதிகாரம் தொடர்பிலும் அதில் விரிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. மாகாணப் பொலிஸ்ஆணைக்குழுவில் மாகாண முதலமைச்சரின் பிரதிநிதி, மத்திய பொலிஸ் ஆணைக்குழுவின் பிரதிநிதி, கொழும்புஆட்சியாளர்களால் நியமிக்கப்படுகின்ற பிரதிநிதி என மூவர் இருப்பார்கள் என்று சொல்லப்பட்டுள்ளது. ஆனால் சிலருக்கு வரலாறு தெரியாது.

1988ஆம் ஆண்டு இறுதியிலே வடக்கு கிழக்கு இணைந்த மாகாணசபையிலே பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஆனந்தராசா அவர்களை அப்போதைய ஜனாதிபதியாக இருந்த பிரேமதாசாநியமித்திருந்தார். அவரின்கீழே3,000மாகாண பொலிஸாரை நியமிப்பதற்கான அங்கீகாரமும் வழங்கப்பட்டு அவர்களுக்கானபயிற்சியும்தொடங்கப்பட்டிருந்தது. இவ்வாறு 13வது திருத்தச்சட்டத்தில் பொலிஸ் அதிகாரம் ஏற்கனவே வழங்கப்பட்டிருக்கிறது என்பதுதான் உண்மை.

அந்த வகையில் மாகாணசபைகளுக்குஅதிகாரங்களைப்பரவலாக்குவதற்கு ஒருநிபுனர்குழுவைஜனாதிபதி நியமிப்பதென்பதுஇந்தநாட்டு மக்களை மாத்திரமல்லாமல் சர்வதேசத்தையும், குறிப்பாக இந்தியாவை ஏமாற்றும் ஒரு செயல்.

இன்றும் குருந்தூர் மலையிலே தொல்பொருள் திணைக்களம்அங்கிருக்கின்ற இந்துக் கோவிலில்பூசைசெய்யவிடாமல் தடுக்கின்றார்கள். பொங்கலைத் தடுப்பதற்காக பௌத்தர்கள் செல்கிறார்கள். உதய கம்மன்பில போன்ற இனவாதஅரசியல்வாதிகளும் செல்கின்றார்கள். இவர்களையெல்லாம் ஜனாதிபதி தூண்டிவிட்டு வேடிக்கை பார்க்கிறார் - என்றார்.

## மோடி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடல்; கடல் ஆழமானது மட்டுமல்ல, வளமானது. மீன்பிடி தொழிலில் 5ஆவது பெரியமாநிலமாகத்தமிழ்நாடு உள்ளது.

மீனவர் நலனுக்காக திமுக ஆட்சியில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன. கடந்த 2 ஆண்டுகளில்மீனவர்கள்நலனுக்காக ஏராளமான திட்டங்களை செயல்படுத்தி உள்ளோம்.

மீன்வளத்துறை பெயரை மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையாக மாற்றினோம்,

45 ஆயிரம் மீனவர்களுக்கு கூட்டுறவுக் கடன் வழங்கப்படும்; மீனவர்களுக்கான வீடு கட்டும் திட்டத்தில் 5,035 வீடுகளுக்கு நிலப் பத்திரம் வழங்கப்படும்

தங்கச்சிமடத்தில்மீன்பிடி துறைமுகம் அமைக்க ஆய்வு மேற்கொள்ளப்படும். தூத்துக்குடி, நெல்லை, குமரி மாவட்ட நாட்டுப்படகு மீனவர்களுக்கான மண்ணெண்ணெய் 3,400 லிட்டரில் இருந்து 3, 700 லிட்டராக அதிகரிப்பு, விசைப் படகுகளுக்கு மானிய டீசல் 18,000இல் இருந்து 19,000 லீற்றராக அதிகரித்து வழங்கப்படும். நாட்டுப்படகு மீனவர்களுக்கு மானிய டீசல் 4,000ல் இருந்து 4,400 லீற்றராக உயர்த்தி வழங்கப்படும்.

மீனவர்களுக்கு அளித்த வாக்குறுதியை பிரதமர் நரேந்திரமோடி நிறைவேற்றவில்லை.

பாஜக ஆட்சிக்கு வந்து 9 ஆண்டுகளில், தமிழ்நாடு மீனவர்களின் மீது இலங்கை கடற்படையின் தாக்குதல் தொடர்கிறது.

மீனவர் பிரச்னைக்கு தீர்வு காண பாஜக அரசு என்ன செய்துள்ளது? என்று தமிழக முதல்வர் கேள்வி எழுப்பி உள்ளார்.

2024 நாடாளுமன்றத் தேர்தலில் ஆட்சி மாற்றத்தை கொண்டுவந்து கச்சத்தீவை இலங்கையிடமிருந்து மீட்டு தமிழ்நாடு மீனவர்களின் உரிமை நிலைநாட்டப்படும் - என்றார்.

## ஜே.வி.பி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

குறித்த குற்றச்சாட்டில் எவ்விதஉண்மையும்இல்லை என்ற போதிலும் அதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க போவதில்லை. முன்னிலைசோசலிசக்கட்சி கவனத்தைஈர்ப்பதற்காகசிறு பிள்ளைகள் விளையாட்டு பொருட்களை தரையில் தூக்கி அடிப்பது போன்ற செயலை செய்துள்ளது. இதனால், அதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதில் பயனில்லை -என்றார்.

இதேவேளை, மக்களுக்குஎந்தளவுக்குஉண்மை நிலைமைகளை எடுத்து கூறியுள்ள நிலைமையில் அடுத்த தேர்தலில் தேசிய மக்கள் சக்தி வெற்றி பெறவில்லை என்றால், தனியான தீவை தேடி செல்ல நேரிடுமெனமக்கள்விடுதலை முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்துள்ளார்.

தேசிய மக்கள் சக்தியின் அதிகார சபைக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அத்துடன், தமதுகட்சிமீது சேறுபூசுவதைஆசிர்வாதமாக எடுத்துக்கொண்டு பூசும் சேற்றை கொண்டு வீடு ஒன்றைகட்டப்போவதாகவும் சுசில் ஹந்துன்நெத்தி கூறியுள்ளார்.

## நிமல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விக்கிரமசிங்க சகல அரசியல் கட்சிகளின் யோசனைகளை பெற்றுக்கொள்ளநடவடிக்கை எடுத்துள்ளார்.

இவ்வாறான நிலைமையில் பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் அதற்கு எதிராக கருத்து வெளியிடுவது அவர்களின் இரட்டைநிலைப்பாட்டைகாட்டுவதாக அமைந்துள்ளது.

நிலையான பொருளாதாரம் மற்றும் ஐக்கியத்தை கட்டியெழுப்ப நாட்டின் அனைத்து இனங்களுக்கும் இடையில் அமைதியையும் நல்லிணக்கத்தைஉருவாக்க வேண்டும்.

இனங்களுக்கு இடையில் நம்பிக்கையை ஏற்படுத்தும் அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அதிகார பகிர்வை வழங்க வேண்டும்.இதன்மூலம்சகல இன மக்களிடம் இருந்தும் நாட்டின் அபிவிருத்திக்கான பங்களிப்பைபெற்றுக்கொள்ள முடியும்.

அப்போது இனங்களுக்கு மத்தியில் தாம் இலங்கையர்கள் என்ற உணர்வு ஏற்படும். சகல இனங்களும் ஏற்றுக்கொள்ளக் கூடிய அதிகார பகிர்வின் மூலம் சர்வதேசத்தின் நம்பிக்கையையும் கட்டியெழுப்ப முடியும்.

இது குறித்த குறைந்தளவு புரிதல்கூட இல்லாமல், பொதுஜன பெரமுனவின் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவின் நிலைப்பாடு மட்டுமின்றி, கட்சியில் அங்கம் வகிக்கும் மனசாட்சிபடி செயற்படும் பெரும்பாலான பாராளுமன்ற உறுப்பினர்களின்நிலைப்பாடுகளுக்கு புறம்பான நிலைப்பாட்டை கட்சியின் பொதுச்செயலாளர் எந்த அடிப்படையில் முன்வைத்துள்ளார் என்பதை தெளிவுப்படுத்த வேண்டும்.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் வேட்பாளர் நிறுத்தப்படுவார் என அந்த கட்சியை சேர்ந்த சிறிய தரப்பினர் பல்வேறு கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர். முடிந்தால், பொதுஜனபெரமுனதேர்தலில் நிறுத்த போகும் அந்த வேட்பாளர் யார் என்பதை நேரடியாகநாட்டுக்குதெரியப்படுத்த வேண்டும் - என்றார்.

## கோப்பாய், ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிழக்கு, கோப்பாய்

2. விஜயவர்தன அபேயவிக்ரம நிசங்க - வைத்தியர், மாவட்ட ஆதார வைத்தியசாலை - ரிகில்லகஸ்கட மற்றும் சுகாதாரசேவைகள்அலுவலக மாவட்ட பணிப்பாளர் - நுவரெலியா

3. யசோதாஉதயகுமார் -பிரதேசசெயலாளர், பிரதேச செயலகம்-வலிகாமம்தென் மேற்கு, சண்டிலிப்பாய்

4. பிரதிபானி ஸ்ரீ விஜயந்தி மொல்லிகொட - தாதி, ஆதாரவைத்தியசாலை - எல்பிட்டிய

5. நளின் பிரசன்ன விஜேசேகர - மேலதிக சுகாதார வைத்தியர், பொதுச் சுகாதார பணிமனை - அம்பலாங்கொடை ஆகியோருக்குநினைவுச்சின்னங்கள் வழங்கிகௌரவிக்கப்பட்டனர்.

## தமிழ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குடும்பத்தினருடன் தங்கி நின்று வேலை புரியும் குறித்த இளைஞர், நேற்று இரு குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட மோதலில் அடித்துப் படுகொலை செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இந்தச்சம்பவம் தொடர்பில் நேற்று இரவு வரை சந்தேகநபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை.

## உள்ளூராட்சி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மன்றஉறுப்பினர்தொலவத்த தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

இளைஞர்களின் பிரதிநிதித்துவத்தைப்பற்றிநாங்கள் தொடர்ந்துபேசிவருகிறோம். நம்நாட்டில்பலகலவரங்கள் நடந்துள்ளன. 1971 மற்றும் 1989 ஆம் ஆண்டுகளைப் போலவே, கடந்தகாலத்திலும் ஒரு இளைஞர் எழுச்சியைக் கண்டோம்.

ஆனால், 1989ஆம் ஆண்டுக்குப் பிறகுதான் நமது நாட்டு இளைஞர்கள் அரசியலுக்கு வருவதற்கான வாய்ப்பு கிடைத்ததோடு அதற்குத் தேவையான தலைமீடுகள் மேற்கொள்ளப்பட்டன.

இளைஞர் அதிருப்தி ஆணைக்குழுவினால் உள்ளூராட்சி மன்றங்களுக்கு 25சதவீத இளைஞர்களின் வேட்புமனுக்களுக்கு வாய்ப்பளிக்கப்பட்டது. ஆனால் துரதிஷ்டவசமாக கடந்த காலத்தில் பெண்களின் பிரதிநிதித்துவம் தொடர்பில் உரிமை வழங்குவதற்கான உள்ளூராட்சி சட்டத் திருத்தத்தின் போது இளைஞர்களுக்கான வாய்ப்பு பறிபோனது.

இதனால் 2018 உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் இளைஞர்களுக்கு அந்த வாய்ப்பு கிடைக்கவில்லை. அதன்படி 2018ஆம் ஆண்டு உள்ளூராட்சிசபைத் தேர்தலில் வயதானவர்களே அதிகமாக போட்டியிட்டார்கள்.

நாடாளுமன்றத்தில் இளைஞர் பிரதிநிதித்துவம் பற்றி நாம் பேசினாலும், அவர்களுக்கு அந்த வாய்ப்பு கிடைப்பதை காண முடியவில்லை. ஆனால் உள்ளூராட்சி மன்றங்களில் இளைஞர் பிரதிநிதித்துவம் என்பது பல தசாப்தங்களாக நாம் காணக்கூடிய ஒன்று. அதன்படி, அரசியல் குடும்பப் பின்னணி இல்லாத இளைஞர்கள்பாராளுமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு அமைச்சர்களாக பதவி வகித்த சந்தர்ப்பங்களை நாம் பார்த்திருக்கிறோம்.

இளைஞர்களுக்கு 25 சதவீதமான வேட்புமனுக்களை தாக்கல் செய்யும் உரிமையை இளைஞர்களுக்குவழங்கும்வகையில் உள்ளூராட்சிமன்றசட்டத்தில் திருத்தம்செய்யப்படுவதோடு அவர்களுக்குரியஉரிமையை மீளப் பெற்றுக்கொடுப்பதற்காகவே இந்தப் பிரேரணை முன்வைக்கப்படுகிறது.

தனிநபர்பிரேரணையாக இந்த முன்மொழிவை நான் சமர்ப்பித்தேன். இந்த பிரேரணை கொண்டு வரப்பட்டு நீண்ட காலம் கடந்ததுடன், இந்தவிடயங்கள்பாராளுமன்ற அரசியலமைப்பு தெரிவுக் குழுவிலும் அமைச்சரவையிலும்தொடர்ச்சியாக ஆராயப்பட்டது. சில நேரங்களில் தனிநபர் பிரேரணைசட்டமாகமாறமிகவும் கடினமானது என்பதோடு நீண்ட காலம் எடுக்கும்.

இளைஞர்பிரதிநிதித்துவச் சட்டம், அமைச்சரவையில் இரண்டு முறை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு இளைஞர் தினத்தையொட்டி, அடுத்த பாராளுமன்ற அமர்வில் இளைஞர்களின் பிரதிநிதித்துவத்தை 25 சதவீதமாக அதிகரிப்பதற்கான சட்ட மூலத்தை மீண்டும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்ற வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

தனிநபர்பிரேரணையை பாராளுமன்றத்தில் சட்டமாக மாற்றதேவையானஆதரவை வழங்கியமைக்கு ஜனாதிபதிக்கு நன்றி தெரிவிக்க விரும்புகிறேன். மேலும், இளைஞர்களுக்கு அதிக வாய்ப்புகளைவழங்குவதில் அவரது பங்களிப்பை பாராட்ட வேண்டும்.

எமது நாட்டில் நீண்டகாலமாக இருந்து வந்த ஆனால் கடந்த காலத்தில் இரத்துச் செய்யப்பட்ட இளைஞர்பிரதிநிதித்துவத்தை மீளப் பெறுவதற்கு அரசாங்கத்தை பிரதிநிதித்துவப் படுத்தாத ஏனைய கட்சிகளினதும் ஆதரவு கிடைக்கும் என்றுநம்புகிறேன்-என்றார்.

## தமிழரின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எந்த வித அனுமதியும் இன்றி தொல்பொருள் திணைக்களத்தின் முழுமையான ஆதரவுடனும் அரச ஆதரவுடனும் இந்த விகாரை கட்டப்பட்டுள்ளது. அதேநேரம் இங்கிருந்த ஆதிசிவன் அழிக்கப்பட்டுள்ளது. அந்த ஆலயம் இருந்த இடத்தில் ஒரு பொங்கல் செய்ய முடியவில்லை.

இந்த இடத்தில்தான் நீங்கள் பொங்க வேண்டும் என்று ஓர் இடத்தினைக் குறிப்பிட்டு அந்த இடத்தில் கல் வைத்து அதன்மேல் தகரம் வைத்து அதன் மேல் அடுப்புவைத்துதான் பொங்கவேண்டும் என்ற அதிசயமான சட்டங்களை இந்த மண்ணில் இந்த ஆலயத்தில்தான் பார்க்க முடிந்தது .

ஆனாலும் நாங்கள் ஒற்றுமையாக, அனைத்துத் தமிழர்களும் இணைந்துவந்து எம்பெருமான் சிவனுக்குரிய அரோகரா என்ற நாமத்துடன் பொங்கல் நிகழ்வினை முடித்துள்ளோம். இந்த பொங்கல் நிகழ்வு தொடர்ந்து மாதம் மாதம் நடைபெறும் அதேவேளை மக்களின் இருப்பினையும் அடையாளங்களையும் பேணும்வகையிலும்எங்கள் செயற்பாடுகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படும்.

இந்த இடத்தில் பாரம்பரியமான வரலாற்று புகழ்மிக்க சிவாலயம் கட்டுவதற்கான ஏற்பாடுகளையும் நாங்கள் எல்லோரும் இணைந்துமுன்னெடுப்போம் - என்றார் அவர்.

## வேலைதேடிப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆண்டில் நாட்டில் நிலவிய பொருளாதாரநெருக்கடிகளின் காரணமாக வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்காகப் புறப்படுவோர் கணிசமாக அதிகரித்துள்ளது.

வெளிநாட்டு வேலை வாய்ப்புக்காக வெளியேறும் ஆண் மற்றும் பெண்களின் எண்ணிக்கை முறையே 60.1 சதவீதம் மற்றும் 39.9 சதவீதமாகும்.

தொழில்முறை, நடுத்தர நிலை, திறமையான, அரை- திறமையான, திறமையற்ற மற்றும் வீட்டுப் பணிப்பெண் போன்ற அனைத்துபிரிவுகளின்கீழும் புறப்பாடுகள் அதிகரித்துள்ளன.

மத்திய கிழக்கு பிராந்தியம் 2022ஆம்ஆண்டிலும் முக்கிய வெளிநாட்டுவேலை வாய்ப்பு இடமாக இருந்துள்ளது. வெளிநாட்டு வேலைக்கான மொத்தப் புறப்பாடுகளில் 84.7சதவீதம், கத்தார், சவுதி அரேபியா, ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் குவைத் ஆகிய நாடுகளுக்குச் சென்றுள்ளனர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## மூன்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்றும் அவர் தெரிவித்தார்.

மாகாண ஆளுநர்களுடனும், பிரதம செயலாளர்களுடனும் நேற்று ஜனாதிபதி செயலகத்தில் நடந்த சந்திப்பின்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார். மாகாணசபைமுறைமையுடன் எதிர்கால நிர்வாகச் செயற்பாடுகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக இந்தச் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டது.

அங்கு உரையாற்றிய ஜனாதிபதி மேலும் தெரிவித்ததாவது:

மாகாண சபைகளின் நிர்வாகமுறைமைதொடர்பில் கலந்துரையாட நான் உங்கள்அனைவரையும்அழைத்துள்ளேன். மத்திய அரசின் நிர்வாக கட்டமைப்பு தொடர்பிலும் கவனம் செலுத்தி, இதனை எப்படி முன்னெடுத்துச் செல்வது என்பது குறித்து ஆலோசிக்க வேண்டும்.

சிலசமயங்களில்உள்ளூராட்சி மன்றம், மாகாண சபை, மத்திய அரசாங்கம் ஆகியமூன்றுபிரிவுகளாலும் ஒரே மாதிரியான சேவைகள் வழங்கப்படுகின்றன. உதாரணமாக, வடிகால்வெட்டுதல், மின் கம்பம் நடல், வீதிகள் அமைத்தல்போன்றவற்றைச் சுட்டிக்காட்டலாம்.

இவ்வாறு நடப்பதால் பெருமளவு பணம் வீணாகிறது. அப்படியானால், இந்த மூன்று பொறிமுறைகளின் செயல்பாட்டை மையமாகக் கொண்டு ஒரு புதிய பொறிமுறையை அமைக்க வேண்டும். மாகாண பிரதம செயலாளர்களுடன் கலந்தாலோசித்து ஒரு மாதத்திற்குள் அதற்கானபுதியபொறிமுறையொன்றைத் தயாரிக்குமாறு நான் ஆலோசனை வழங்கியுள்ளேன்.

மாகாணசபைகள்இயங்காததாலும், மாகாண சபைகளில் அமைச்சர்கள் இல்லாததாலும் இன்று மாகாண'சபைமுறைமையில் மாகாண ஆளுநர்களாகிய உங்களிடமே முழுமையான ஆட்சி அதிகாரம் உள்ளது. மாகாண பிரதம செயலாளர்களுடன்கலந்தாலோசித்து, ஒருமாதத்திற்குள் அதற்கான புதியகட்டமைப்பைத்தயாரிக்குமாறு நான் ஆலோசனை வழங்கியுள்ளேன்.

கடந்த ஆண்டு நாம் மிகப்பெரிய நெருக்கடிகளை எதிர்கொண்டோம். அதை மீண்டும்சொல்லவேண்டிய அவசியமில்லை. நாட்டின் பொருளாதார பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை வழங்கும்அதேவேளையில், நாட்டின் நிர்வாக முறைமையைவழமைக்குகொண்டுவர வேண்டும்.

குறிப்பாககீழ்மட்டசேவைகள் மாகாண சபைகள் ஊடாகவே மேற்கொள்

தொடர்ச்சி ம் பக்கம்....



காலைக்கதிர் Kalaikkathir

# சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வேலைத் திட்டங்களை ஏற்படுத்துக!

## ஜனாதிபதி பணிப்பு

வருடாந்தம் 05 மில்லியன் சுற்றுலாப் பயணிகளை இலங்கைக்கு அழைத்துவருவதற்கான வேலைத்திட்டத்தை துரிதப்படுத்துமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

இலங்கையில் சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதற்காக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள வேலைத்திட்டத்தின் முன்னேற்றம் தொடர்பாக ஆராய்வதற்கான கூட்டம் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றபோது ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

இலங்கையில் சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதற்காக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள வேலைத்திட்டத்தின் முன்னேற்றம் குறித்து ஆராய்வதற்கான கூட்டம் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது. சுற்றுலாப் பயணிகளைக் கவரக்கூடியதும், சிறந்த சுற்றுலா வசதிகளை கொண்ட இடமாகவும் இலங்கையை மாற்றுவதற்கான குறுகிய கால, இடைக்கால மற்றும் நீண்டகாலத் திட்டங்கள் தொடர்பிலும் இதன்போது ஆராயப்பட்டுள்ளது.

இலங்கையில் சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதற்காக தற்போது முன்னெடுக்கும் திட்டங்கள் மற்றும் தனியார் துறையின் பங்களிப்பு தொடர்பாக அதிகாரிகளிடம் ஜனாதிபதி கேட்டறிந்ததோடு, நடைமுறைச் செயற்பாடுகள் மற்றும் புதிய நிலைவரங்கள் தொடர்பில் ஜனாதிபதிக்கு அதிகாரிகள் விளக்கமளித்தனர்.

இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் தங்குமிட வசதிகளை மேம்படுத்தும் வகையில், தற்போது பயன்படுத்தப்படாத பாரம்பரிய தோற்றம் கொண்ட கட்டடங்கள் மற்றும் பங்களாக்கள் தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை தயாரிக்குமாறும், தற்போது வரையில் சுற்றுலாப் பயணிகளின் கவனத்திற்கு உட்படாத பகுதிகளைக் கண்டறியுமாறும் ஜனாதிபதி அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

புதிய முதலீடுகளுக்கு உகந்த சூழலை நாட்டிற்குள் உருவாக்குவதற்கான முதலீட்டு உட்கட்டமைப்பு கூட்டுத்தாபனம் ஒன்று நிறுவப்பட்டு, கொள்கை ரீதியிலான தீர்மானங்களை மேற்கொள்வதற்கான சபையொன்றை ஸ்தாபிக்கத் திட்டமிட்டுள்ளதாகவும் முதலீட்டு வலயங்கள், சுற்றுலா வலயங்கள், தொழில்நுட்பவலயங்கள் என்பவற்றை அதன் கீழ் நிறுவத் திட்டமிட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டினார். (05)

# நீர் கட்டண புதிய விலை சூத்திரம் டிசெம்பர் மாதத்தில் இருந்தாம்

## அமைச்சர் ஜீவன் தெரிவிப்பு



நீர் கட்டணத்துக்கான விலை சூத்திரம் எதிர்வரும் டிசெம்பர் மாதம் முதல் நடைமுறைப்படுத்தப்படும் என நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட அவர், தற்போதைய நீர் கட்டண முறை அந்த மாதம் வரை மாத்திரமே அமுலில் உள்ளதாகத் தெரிவித்தார்.

அதன்படி, விலைச் சூத்திரம் அறிமுகம் செய்யப்பட்ட பிறகு அதைத் திருத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. (05)

# கூரிய ஆயுதத்தினால் மாணவன் மீது தாக்குதல்

## மற்றொரு மாணவன் மீது குற்றச்சாட்டு

காலி - கரந்தெனிய பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றின் மாணவரொருவர் அதே பாடசாலையில் கல்வி கற்கும் சக மாணவனை கூரிய ஆயுதம் ஒன்றால் தாக்கியுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பாடசாலை விளையாட்டு மைதானத்துக்கு அருகில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதுடன், 12 ஆம் தரத்தைச் சேர்ந்த மாணவர் ஒருவரே இந்த தாக்குதலை மேற்கொண்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

தாக்குதலுக்கு உள்ளானவர் 11 ஆம் தரத்தைச் சேர்ந்த மாணவர் எனவும் அவர் தற்போது எல்பிட்டிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

தாக்குதலுக்கான காரணம் தெரியவராத நிலையில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (05)

# ஹோமாகம தீ விபத்து கட்டுப்பாட்டுக்குள்

ஹோமாகம பகுதியில் அமைந்துள்ள இரசாயன களஞ்சியசாலையொன்றில் வியாழக்கிழமை இரவு ஏற்பட்ட தீ விபத்து, பாரிய சிரமங்களை அடுத்து கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

ஹோமாகம கைத்தொழில் வலயத்தில் உள்ள தொழிற்சாலை ஒன்றின் இரசாயன களஞ்சியசாலை ஒன்றிலேயே இந்த தீ விபத்து ஏற்பட்டுள்ளது.



வியாழக்கிழமை இரவு 8.30 மணியளவில் இந்த தீ விபத்து ஏற்பட்டதையடுத்து, பல கிலோ மீற்றருக்கு புகை பரவியதையடுத்து, அப்பகுதியில் பெரும் பரபரப்பான சூழல் ஏற்பட்டது.

இதனையடுத்து குறித்த களஞ்சியசாலைக்கு அருகில் வசிக்கும் பிரதேச வாசிகள் சிலர் அங்கிருந்து உடனடியாக வேறு இடங்களுக்கு வெளியேறினர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தீவிபத்து தொடர்பாக தெரியப்படுத்தியதை அடுத்து சம்பவ இடத்திற்கு 7 தீயணைப்பு வாகனங்கள் உடனடியாக வருகைத் தந்து, தீயை கட்டுப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டிருந்தன.

கோட்டே நகரசபையின் தீயணைப்புப் பிரிவினரும் ஹொரணை நகரசபையின் தீயணைப்புப் பிரிவினருமே குறித்த பணிகளில் ஈடுபட்டனர்.

மேலும், தீப்பரவலை கட்டுப்படுத்த இராணுவத்தின் உதவியும் பெற்றுக் கொள்ளப்பட்டது. இந்தத் தீ விபத்தால், தொழிற்சாலையின் இரண்டு கட்டடங்கள் முற்றாக சேதமடைந்துள்ளன என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில், தீப்பரவலானது பல மணிநேரப் போராட்டத்தின் பின்னர் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெள்ளிக்கிழமை அதிகாலை 3.30 மணி அளவில் தீபரவல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் எவ்வாறாயினும் குறித்த பகுதியில் வளி மாசடந்துள்ளமையால், முகக் கசவங்களை அணியுமாறு பொதுமக்களிடம் கோரப்பட்டுள்ளது.

தீப்பரவல் ஏற்பட்டமைக்கான காரணம் இதுவரை கண்டறியப்படாத நிலையில், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (05)







# நீச்சல் போட்டிகளில் மூதாட்டிகள் சாதிப்பு

வடமராட்சி வடக்கு இன்பருட்டி கிராம அபிவிருத்திச் சங்கத்தின் 67 ஆவது ஆண்டு விழாவும், காண்டீபன் விளையாட்டு கழகத்தின் மாபெரும் விளையாட்டுப் போட்டியும் நேற்று (வெள்ளிக்கிழமை) இடம்பெற்றது. இதில் பெண்களுக்கான ஒரு கடல் மைல் நீச்சல் போட்டி இடம்பெற்றது.

இந்தப்போட்டியில் நான்கு பிள்ளைகளின் தாயான 40 வயது பெண்மணி முதலாமிடத்தையும், மூன்று பிள்ளைகள் இரண்டு பேரப் பிள்ளைகளைக் கொண்ட 44 வயது பெண்மணி இரண்டாமிடத்தையும் பிடித்துள்ளதோடு நான்கு பேரப்பிள்ளைகள் மற்றும் ஆறு பிள்ளைகளுடன் 56 வயதான பெண்மணியொருவர் மூன்றாமிடத்தையும் தனதாக்கிக் கொண்டனர்.

இதில் ஆண்களுக்கான நீச்சல், படகோட்டப்போட்டிகள் இடம்பெற்றன, ஆயினும் பெண்களுக்கான நீச்சல் போட்டியில் வயோதிப மாதுக்களின் நீச்சல் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

பருத்தித்துறை - தென்னியம்மன்முனையில் இருந்து இன்பசிட்டி வரை குறித்த நீச்சல் போட்டி இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

# ஆண் ஒருவரின் சடலம் குளத்திலிருந்து மீட்பு

## கிளிநொச்சியில் சம்பவம்

கிளிநொச்சி, தர்மபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாதன் குடியிருப்பு பகுதியில் அமைந்துள்ள சிறிய குளம் ஒன்றிலிருந்து ஆண் ஒருவரின் சடலம் கடந்த வியாழக்கிழமை மீட்கப்பட்டுள்ளது. மீன் பிடிக்கச் சென்ற 46 வயதான இரண்டு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

திடீரென ஏற்பட்ட வலிப்பு நோய் காரணமாக அவர் நீரில் மூழ்கி உயிரிழந்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது.

இந்நிலையில் உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக கிளிநொச்சி வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக தர்மபுரம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (05)

# மாணவரின் எழுத்தறிவு வீதத்தில் பெரும் வீழ்ச்சி

## ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம் தகவல்

நாட்டில் தரம் மூன்றில் கல்வி கற்கும் 85 வீத மாணவர்களுக்கு எழுத்தறிவு குறைவாக உள்ளதாக ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம் சுட்டிக்காட்டியுள்ளது.

நாட்டில் மூன்றாம் தரத்தில் கல்வி கற்கும் 85 வீதமான மாணவர்களின் எழுத்தறிவு மற்றும் எண் கணித அறிவு குறைந்தபட்ச நிலையிலேனும் எட்டவில்லை என ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்நிலைமை குழந்தைகளின் இடைநிலைக் கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் எதிர்கால வாழ்வில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுமார் 3 வருடங்களாக பாடசாலைகள் மூடப்பட்டதால், அல்லது இடைநிறுத்தப்பட்டமையால் ஆரம்பப் பிரிவை சேர்ந்த 16 லட்சம் மாணவர்கள் கல்வியை இழந்துள்ளனர் எனவும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

கல்வி அமைச்சும் யுனிசெவ் நிறுவனமும் இணைந்து மாணவர்களுக்கு மூன்று வருடங்கள் தவறவிட்ட கல்விக் காலத்தை மீள வழங்குவதற்கான தேசிய வேலைத்திட்டத்தை 16 ஆம் திகதி கொழும்பில் ஆரம்பித்த போது, இந்த விடயம் குறித்து தெரிவிக்கப்பட்டது. (05)

# மின்சாரத்தைக் கொள்வனவு செய்வதற்கு பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு அனுமதி

100 மெகாவாட் மின்சாரத்தைக் கொள்வனவு செய்ய பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

100 மெகாவாட் மின்சாரத்தை 6 மாத காலத்துக்கு கொள்வனவு செய்ய இலங்கை மின்சார சபைக்கு இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

2009 ஆம் ஆண்டு 20 ஆம் இலக்க இலங்கை மின்சார சட்டத்தின் 43 ஆவது பிரிவின் கீழ் இந்த அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அத்தோடு, 3 முக்கிய நிபந்தனைகளின் கீழ் 2023 ஒகஸ்ட் மாதம் 18 ஆம் திகதி முதல் 6 மாத காலத்துக்கு மின்சாரத்தைக் கொள்வனவு செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அந்தவகையில், குறித்த மின்சார கொள்முதல் சிறப்புத் தகுதியின் அடிப்படையில் செய்யப்பட வேண்டும் மற்றும் மின்சார கொள்முதல் ஒப்பந்த காலத்தின் முடிவில் கொள்முதல் பற்றிய சுயாதீன தணிக்கை செய்யப்பட வேண்டும் என்று முதல் நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.

கொத்மலை பொல்பிட்டிய 220 கிலோ வாட்ஸ் பாதை 2024 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் செயற்படுத்தப்பட வேண்டும் என்று இரண்டாவது நிபந்தனையும் கொள்வனவு செய்யவுள்ள மின்சாரத்தை குறைந்தபட்ச விலையின் அடிப்படையில் கொள்வனவு வேண்டும் என்று மூன்றாவது நிபந்தனையும் விதிக்கப்பட்டுள்ளது. (05)

# கெக்கிராவவில் மது போதையுடன் பாடசாலைக்குச் சென்ற மாணவி

கெக்கிராவ பிரதேச பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் 14 வயது மாணவி ஒருவர் கடந்த வியாழக்கிழமை மதுவருந்தி விட்டு பாடசாலைக்கு சென்ற நிலையில் மாணவியை கைது செய்த பொலிஸார் வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர்.

சம்பந்தப்பட்ட மாணவி பாடசாலை அருகில் நின்ற போது அவரது நடவடிக்கை மீது சந்தேகம் கொண்ட பொலிஸார் மாணவியிடம் விசாரணை நடத்திய போது அவர் மது அருந்தியிருந்தமை உறுதிப்படுத்தப்பட்டது.

இதனையடுத்து பொலிஸார் மாணவியை வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்று, பாடசாலை அதிபரிடம் வாக்குமூலம் பெற்றுக்கொள்வதற்காக தொடர்பு கொள்ள முயற்சி செய்த போது பாடசாலையில் இருந்து தொடர்பு துண்டிக்கப்பட்டது.

இந்த நிலையில் குறித்த மாணவியிடம் பொலிஸார் விசாரணை நடத்திய போது மாணவியின் தாத்தாவே தன்னை மது பழக்கத்திற்கு அடிமையாக்கினார் எனத் தெரிவித்துள்ளார். (05)

# இரு மாணவக் குழுக்களுக்கிடையில் கொட்டகல பாடசாலையில் மோதல்

கொட்டகலை பிரதேசத்தில் உள்ள தமிழ் பாடசாலை ஒன்றின் இரு மாணவ குழுக்களுக்கு இடையில் மோதல் ஏற்பட்டுள்ளது.

நுவரெலியா வலயக் கல்வி அலுவலகத்திற்குட்பட்ட ஹற்றன் கொட்டகலை பிரதேசத்தில் உள்ள தேயிலைத் தோட்டத்தில் அமைந்துள்ள பிரதான தமிழ் பாடசாலையொன்றின் மாணவர்களுக்கிடையில் வியாழக்கிழமை பிற்பகல் இடம்பெற்ற மோதல் சம்பவம் தொடர்பில் திம்புல பத்தனை பொலிஸாருக்கு இரு தரப்பிலும் முறைப்பாடுகள் கிடைத்துள்ளன எனப் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

பாடசாலையின் 8, 9 மற்றும் 10 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு இடையில் பாடசாலை நிறைவடைந்ததற்குப் பின்னர் பாடசாலை மைதானத்தில் இந்த மோதல் இடம் பெற்றுள்ளதாக பொலிஸ் அதிகாரி தெரிவித்தார்.

மோதலில் ஈடுபட்ட மாணவர்கள் குழுவிடமிருந்து பொலிஸாருக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன எனவும், அந்த முறைப்பாடுகள் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர் எனவும் திம்புலபத்தனை பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (05)

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## அரசின் உடனடி அக்கறை தேவை

நாடு முழுவதும் பல வைத்தியசாலைகளில் கதிரியக்க தொழில்நுட்ப வல்லுநர்களின் பற்றாக் குறை காரணமாக பரிசோதனைகள் நிறுத்தப்படும் அபாயம்ஏற்பட்டுள்ளதாகஅரசகதிரியக்கதொழில்நுட்ப வல்லுநர்கள் சங்கம் அறிவித்துள்ளமை ஓர் அபாய அறிவிப்பாகவே தோன்றுகின்றது.

இரத்தினபுரி , காலி , பதுளை , கொழும்பு தேசிய வைத்தியசாலைகளில் பெரும் அபாய நிலை காணப்படுவதாக சங்கம் குறிப்பிட்டுள்ளது. நாடு முழுவதிலும் உள்ள வைத்தியசாலைகளில் தற்போது கதிரியக்க தொழில்நுட்ப வல்லுநர்களுக்கு கடுமையான பற்றாக்குறை நிலவி வருகிறது. விசேடமாக , சி.டி, எம்.ஆர்.ஐ. பி.இ.டி. பரிசோதனை மேற்கொள்ளும் இடங்களில் பணி புரிய ஆட்களற்ற நிலைஏற்பட்டுவருவதாகவே சங்கம்எச்சரிக்கின்றது.

அதிகாரிகளின் பணி ஓய்வும் , அவர்கள் அரச அனுமதியுடன் வெளிநாடுகளுக்கு செல்வதும் இதற்குக் காரணம். ஒரு புறத்தில் மருத்துவ நிபுணர்களும் நாட்டைவிட்டு வெளியேறி வருகின் றார்கள். இதனாலும் மருத்துவத்துறை பெரும் நெருக்கடியைச் சந்திக்கும் நிலை உருவாகியுள்ளது. மறுபுறத்தில் மருத்துவத்துறையின் உயிர்நாடியான கதிரியக்கத்துறையும்நெருக்கடிகளைஎதிர்நோக்கத் தொடங்கியிருப்பது நாட்டில் பேராபத்தை ஏற்படுத்தும் அபாயத்ததை உருவாக்கியுள்ளது.

விரைவான நடவடிக்கையாக ஆட்சேர்ப்பு மற்றும் தற்காலிகமாகவேனும் ஓய்வு பெறும் வயதை 60இலிருந்து 63 வரையில் நீடிப்பது ஆகியவற்றின் மூலம் கதிரியக்கத்துறையின் நெருக்கடியைச் சமாளிக்க முடியும் என்றும் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

அவ்வாறில்லையேல், எதிர்வரும் மாதத்திற்குள் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பி.இ.டி. பரிசோதனை இயந்திரம் நிறுத்தப்படும் என்றும் அது எச்சரித்துள்ளது.

அரசு இந்த விடயத்தில் உரிய அக்கறை எடுத்து உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். நாட்டில் அரச மருத்துவமனைகளையும் அவற்றின் இலவச மருத்துவத்தையும் நம்பியே பெரும்பான்மையானவர்கள் வாழ்கிறார்கள். எல்லோருக்கும் தனியார் துறையில் மருத்துவம் பார்ப்பது நடக்கக்கூடிய காரியமல்ல. எனவே பொது மருத்துவத்துறையின் பலவீனம் பல உயிர்களைக் காவுகொள்ளக் காரணமாகிவிடும். அது ஒருபோதும் ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல.

அதிகரித்த வரி விதிப்புக் காரணமாக மருத்துவ நிபுணர்கள் நாட்டைவிட்டு வெளியேறுகின்றார்கள் என்கிற குற்றச்சாட்டும் உண்டு. மருத்துவர்கள் பலர் அரசுக்கு அறிவிக்காமலேயே நாட்டைவிட்டு வெளியேறி இருக்கின்றார்கள் என்பது அரசு மீது மருத்துவத்துறையினர்நம்பிக்கையிழந்திருப்பதைக் காட்டுகின்றது.

இவை அனைத்தும் இணைந்து நாட்டின் பொது மருத்துவத்துறை மீது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தப்போகின்றன. அரசு அதற்கு இடமளிக் கக்கூடாது. மருந்துகளின் தரம் குறித்த சர்ச்சைக்கு நடுவே இவையும்சேர்ந்து மக்களின்எதிர்காலத்தைக் கேள்விக்குறியாக்கிவிடுவதற்கு அனுமதிக்க முடியாது.

இதனால் இது விடயத்தில் அரசு உடனடிய நடவடிக்கைகளை எடுத்துத் தீர்வு காண்பது அவசியம்.



# அம்பாந்தோட்டையில் சீன கடற்படை முகாம்

ரதீந்திர குருவிட்ட

இலங்கையின் அம்பாந்தோட்டைத் துறைமுகத்தில் அடுத்த இரண்டு முதல் ஐந்து ஆண்டுகளில் சீனா தனது கடற்படைத் தளத்தை நிறுவக்கூடும் என்று அமெரிக்கப் பல்கலைக்கழகம் ஒன்று தனது ஆய்வு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

வேர்ஜீனியாவில் உள்ள வில்லியம்ஸ்பர்க்கில் உள்ள வில்லியம் மற்றும் மேரி பல்கலைக்கழக கல்லூரியின் ஆராய்ச்சிஆய்வகமானஎய்ட்டேட்டாவின் (AidData) சமீபத்திய அறிக்கையில் இந்த விவரம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனது காலடியில் இருக்கும் இலங்கையில் சீனாவின் இத்தகைய ஆதிக்கம் இந்தியாவின் கவலைகளை அதிகரிக்கும் என்றும் அந்த ஆய்வு தெரிவிக்கின்றது.

உலகளாவிய லட்சியங்களை அடைதல் சீனாவின் துறைமுகங்கள் தடம் மற்றும் எதிர்கால வெளிநாட்டு கடற்படைத் தளங்களுக்கான தாக்கங்கள் என்ற தலைப்பில் இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. அடுத்த இரண்டு முதல் ஐந்து ஆண்டுகளில் சீனா கடற்படைத் தளங்களை நிறுவக்கூடிய எட்டு இடங்களை இந்த ஆய்வு அறிக்கை அடையாளம் கண்டுள்ளது. அந்தப் பட்டியலில் இலங்கையின் அம்பாந்தோட்டை துறைமுகம் முதலிடம் பிடித்துள்ளது. அதாவது இங்கு சீன கடற்படைத் தளம் அமைவதற்கான சாத்தியங்கள் அதிகம் என்கிறது அறிக்கை.

தளம் இருப்பதற்கான சாத்தியக் கூறுகள் அதிகம். பட்டியலில் உள்ள மற்றவை பாட்டா, எக்குவடோரியல் கினியா - குவாதர், பாகிஸ்தான் - கிரிபி, கேமரூன் - ரியாம், கம்போடியா - வனுவாடு - நகாலா, மொசாம்பிக் மற் றும் நோவாக்சோட், மொரிட்டானியா ஆகிய துறைமுகங்கள் அடுத்தடுத்த இடங்களைப் பிடித்துள்ளன. .

2001 முதல் 10 வருடங்களில், சீனா உலகளவில் 29.9 பில்லியன் டொலர் மதிப்பிலான 123 துறைமுகத் திட்டங்களை செயல்படுத்தியது. 46 நாடுகளில் 78 துறைமுகங்களின் கட்டுமானம் அல்லது விரிவாக்கத்திற்கு நிதியளித்தது. இந்த முதலீடுகளில், அம்பாந்தோட்டை துறைமுக திட்டம் சீனாவின் மிகப்பெரிய முதலீடாகும்.

அம்பாந்தோட்டையை சீனாவின் முதல் தெரிவாக இந்த ஆய்வு வெளியிடப்பட்டிருப்பதற்குப் பல காரணங்கள் உண்டு. சீனாவின் அபிவிருத்தி நிதியுதவியின் அளவு, அம்பாந்தோட்டையின் மூலோபாய மதிப்பு மற்றும் இடம், இலங்கை உயரடுக்குகளுடன்சீனாவின்வலுவான உறவுகள், ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் சீனாவுக்கு ஆதரவாக வாக்களிக்கும் கொழும்பின் இணக்கம் மற் றும் கடற்படைக் கலங்களுக்கு மிக ஏற்றதான துறைமுகப் பண்புகள் ஆகியவையே அந்தக் காரணங்கள்.

அண்மைய ஆண்டுகளில், அம்பாந்தோட்டை துறைமுகத்தை இராணுவ நோக்கங்களுக்காக சீனா பயன்படுத்தியது குறித்து பல ஊகங்கள் உள்ளன. எய்ட் டேட்டா (AidData) அறிக்கை இந்த ஊகங்களுக்கு மேலும் தீனி போடும்.

இது குறிப்பாக இந்தியாவின் அச்சங்களை ஆழப்படுத்தும் என்று கொழும்பில் உள்ள சுயாதீன சிந்தனைக் குழுவான ஃபேக்டமின் சர்வதேச உறவுகளின் தலைவர் உதித்த தேவப்பிரிய 'தி டிப்ளமேட்' இணையத்திடம் தெரிவித்தார்.

மகிந்த ராஜபக்ஷ 2005 ஆம் ஆண்டு இலங்கை ஜனாதிபதியாகப் பதவியேற்றதன்பின்னர், சீனாவுடனான இலங்கையின் அதிகரித்து வரும் நல்லுறவை இந்தியா கவலையுடன் அவதானித்து வருவதாக தி மிலேனியம் புரெஜெக்ட்டின் (The Millennium Project) சிரேஷ்ட சக இலங்கை புவிசார் அரசியல் ஆய்வாளர் அசங்க அபேயகுணசேகர தெரிவித்தார்.

2014ஆம் ஆண்டு தலைநகர் கொழும்பில் உள்ள தனது துறைமுகத்தில் சீன நீர்மூழ்கிக் கப்பலையும் போர்க் கப்பலையும் நிறுத்துவதற்கு இலங்கை அனுமதித்தபோது இந்தியா எச்சரிக்கையடைந்தது, அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவின் மெர்ச்சன்ட்ஸ் போர்ட் ஹோல்டிங்ஸ் நிறுவனத்திற்கு 2017இல் 1.12 மில்லின் டொலருக்கு 2017இல் 1.12 பில்லியன் டொலர்களுக்கு இலங்கை குத்தகைக்கு வழங்கிய பின்னர் இந்தியாவின் கவலைகள் அதிவேகமாக வளர்ந்ததாக அபேயகுணசேகர நினைவு கூர்ந்தார்.

இந்தியாவின் அண்டை நாடுகள் பலவும் சீனாவுடனான தங்கள் உறவுகளை திறம்பட மற்றும் வெளிப் படைத்தன்மையுடன் கையாளத் தவறிவிட்டன என்று அபேயகுணசேகர கூறினார்.

அபேயகுனசேகரவின் கூற்றுப்படி, வெளிநாட்டுக் கடற்படை தளங்களை நிறுவுவது சீனாவின் உலகளாவிய நலன்களை விரிவுபடுத்துவதில் ஒரு தர்க்கரீதியான அடுத்த படியாகும், ஏனெனில் கடற்படை தளங்கள் கப்பல் பாதைகளைப் பாதுகாப்பதற்கும் வர்த்தகம் மற்றும் இராஜதந்திரத்தை மேம்படுத்துவதற்கும் இது முக்கியமாகும். தற்போது, சீனாவிற்கு ஒரே ஒரு அதிகாரப்பூர்வ வெளிநாட்டு கடற்படை தளமே உள்ளது - ஜிபூட்டியில் உள்ளது அது - இது சீனாவால் நிதியளிக்கப்பட்டு, கட்டப்பட்டு, இயக்கப்படும் வணிக துறைமுகத்திற்கு அருகில் உள்ளது.

சமீபத்திய ஆண்டுகளில் சீனா ஒரு பெரிய கடல்நாடாக உருவெடுத்துள்ளது. அதன் கடற்படையானது கடலோரச் செயல்பாடுகளைமட்டுமேசெய்யக்கூடிய ஒரு படையிலிருந்து நீல நீர் கடற்படையாக வளர்ந்துள்ளது. பல வல்லுநர்கள் மற்றும் கொள்கை வகுப்பாளர்கள் இது உலகளாவிய சக்தி திட்டத்திற்கான சீனாவின் லட்சியங்களை குறிக்கிறது என்று நம்புகின்றனர்.

சீனாவின் தேசிய பாதுகாப்பு பல்கலைக்கழகத்தால் வெளியிடப்பட்ட தி சயின்ஸ் ஆஃப் மிலிட்டரி ஸ்ட்ரேடஜியின் 2020 பதிப்பில், வெளிநாட்டு இராணுவ நடவடிக்கைகளில் அதிக எண்ணிக்கையிலான கடற்படை பணிகள் இருக்கும், செயல்பாடுகளின் விரிவாக்கம், தளவாடங்கள் மற்றும் உபகரணங்களுக்கான தேவைகள். ஆதரவு அதிகரித்து வருகிறது என்று கூறப்பட்டிருக்கின்றது.

கடற்படைத் தளங்களை உருவாக்குவதன் மூலம் சீனா தனது நலன்களைப் பாதுகாக்க ஆர்வமாக இருந்தாலும், இந்தத் தளங்களை நிறுவி இயக்குவது அவ்வளவு இலகுவானதல்ல என்கிறது அந்த ஆய்வு அறிக்கை. .

AidData அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளபடி, சீனாகடற்படைத்தளம்அமைக்கக்கூடும் என்று பட்டியலிடப்படும் எட்டு துறைமுகங்களில்எதையும்பாதுகாக்கும் நிலையில் அது தற்போது இல்லை.

மேலும், அம்பாந்தோட்டையில் கடற்படைத் தளத்தை அமைப்பதன் மூலம் சீனா இந்தியாவுடனான உறவில்எல்லையைமீறும்தேவப்பிரிய கூறினார். இந்தியாவும் சீனாவும் இணைந்து பல தொழில்களை மேற்கொள்வதாகவும், ஊடகங்களின் கடுமையான ஊகங்கள் இருந்தபோதிலும், சீனா அம்பாந்தோட்டையில் கடற்படைத் தளத்தை நிறுவுவது சாத்தியமில்லை என்றும் அவர் கூறினார்.

இலங்கைத் தீவு இந்தியாவின் தெற்கு கடற்கரைக்கு அருகாமையிலும், இந்தியப் பெருங்கடலிலும் அமைந்திருப்பதால், வெளிநாட்டு சக்திகள் இலங்கையில் காலூன்றுவதைப் பற்றி இந்தியா எப்போதுமே அக்கறை கொண்டுள்ளது.

இந்தியாவிற்கும் சீனாவிற்கும் இடையிலான வரலாறு, தற்போதைய மூலோபாய போட்டி மற்றும் இரு நாடுகளுக்கிடையிலானதிறன்களில்அதிகரித்து வரும் வேறுபாடு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, கொழும்பு மற்றும் பெய்ஜிங்கிற்கு இடையிலான உறவுகள் நெருக்கமடையும் போதெல்லாம் இந்திய தனது அதிருப்தியை வெளிப்படுத்தத் தயங்கியதில்லை. உதாரணமாக, 2022ல், அம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு சீன ஆராய்ச்சிக் கப்பல் வந்தபோது, இந்தியாஎதிர்ப்புதெரிவித்தது. அம்பாந்தோட்டையில் இருந்து 50 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள மாத்தறையில் சீனா ராடார் வசதியை நிர்மாணிப்பதாக இந்திய ஊடகங்களில் செய்திகள் ஊகிக்கப்பட்டுள்ளன.

இலங்கையின் மூலோபாய புவியியல் நிலை, சீனா, இந்தியா மற்றும் அமெரிக்கா உட்பட பல முக்கிய உலகளாவிய நாடுகளின் போர்த் தேவைக்கான கவனத்தை ஈர்த்துள்ளது - இந்த நாடுகள் அனைத்தும் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் ஓர் இருப்பை நிறுவ முயல்கின்றன. சர்வதேசச் சிக்கல்களில் சிக்காமல் இருக்க இலங்கை விரும்பியபோதிலும், கடந்த கால நிர்வாகங்கள் இந்த செல்வாக்குமிக்க நாடுகளுடன் தமது அணிசேரா அயலுறவுக் கொள்கையை நிலைநிறுத்தக் கடுமையாகப் போராடவேண்டி இருந்தது.


எப்படியிருந்தாலும் இந்தியாவின் கவலைகளைத் தணிப்பதில் இலங்கை சிறப்பாகச் செயல்படவேண்டும் என்று தேவப்ரியா 'தி டிப்ளமேட்டிடம்' கூறினார். இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியாவுக்கான பயணத்தை வெற்றிகரமாக முடித்துக்கொண்டுள்ளார் எனவும், அங்கு அவர் ஏற்படுத்திக் கொண்ட நல்லுறவுகள் இலங்கையின் நல்ல நோக்கங்களைத் தெரிவிக்கப் பயன்படும் என்றும் தேவப்பிரிய தெரிவித்துள்ளார். விக்கிரமசிங்க சில மாதங்களில் சீனாவிற்கு பயணம் செய்யும்போதும் அதையே செய்வார் என்று அவர் மேலும் கூறினார்.


(மூலம்: தி டிப்ளோமட்)


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 300/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Coca Cola Tin - 250/=

# இலங்கைப் பிக்கு மீது ஆஸியில் சிறுவர் துஷ்பிரயோக குற்றச்சாட்டு

## நீதிமன்றில் ஆஜரானார்





மெல்போர்னை சேர்ந்த பௌத்தமதகுரு ஒருவர் சிறுவர் பாலியல் துஷ் பிரயோக குற்றச்சாட்டுகள் தொடர்பில் நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார்.

1990 முதல் 2000 வரையிலானகாலப்பகுதியில் சிறுவர்பாலியல்துஷ்பிரயோகங்களில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டுகள் தொடர்பிலேயே பௌத்தமதகுரு நீதிமன்றத்தில்ஆஜராகியுள்ளார்.

மெல்பேர்னின் தென்கிழக்கில் உள்ள தம்ம சரண ஆலயத்தின்மடாதிபதியான நாவோடுன்ன விஜித நாணயக்கார தேரர் 16 வயதிற்குட்பட்டவர்களுடன் உடலுறவில் ஈடுபட்டது அநாகரீகமான விதத்தில் நடந்துகொண்டது உட்பட 13 குற்றச்சாட்டுகளை எதிர் கொண்டுள்ளார்.

பொலிஸார் இந்த வாரம் அவருக்கு எதிராக குற்றச்சாட்டுகளைசுமத்தினர். மூவர்பௌத்தமதகுருவிற்கு எதிராக முறைப்பாடு செய்ய முன்வந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவங்கள் 1996 முதல் 2004 வரையிலான காலப்பகுதியில் குறிப்பிட்ட மதகுரு கெய்ஸ்பொரோ ஆலயத்தில் இருந்தவேளை இடம்பெற்றுள்ளன.

தேரர் பல சிறுமிகளிடம் அநாகரீகமான விதத்தில் நடந்துகொண்டார் என பொலிஸ் விசாரணை பிரிவினர் தெரிவித்துள்ளமை நீதிமன்ற ஆவணங்கள் மூலம் தெரியவந்துள்ளது.

இந்த நிலையில்பௌத்த மதகுரு காவி உடையுடன் வெள்ளிக்கிழமைநீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தார்.(05)

# அம்பலாங்கொடை டில்ஷானின் சகா விசேட அதிரடிப்படையினரால் கைது



தென் மாகாணத்தில் மனிதப் படுகொலைகளை மேற்கொண்டுவரும் பாரிய குற்றவாளியின் சகா ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யபடப்ட சந்தேகநபர் 43 வயதுடைய பயாகல பிரதேசத்தை சேர்ந்த வராவார். தங்காலைபொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் துப்பாக்கிச் சூடு நடத்தி ஒருவரைக் கொலை செய்த நபர்களை சந்தேகநபர் தனது வாகனத்தில் ஏற்றிச் சென்றுள்ளார் எனப் பொலிஸ் விசாரணையில் இருந்து தெரிய வந்துள்ளது.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் சந்தேகநபரிடம்ஹெரோயின் போதைப்பொருளும்கைப்பற்றப்பட்டுள்ளது. கைதான சந்தேக நபர் தற்போது வெளிநாட்டில் வாழும் அம்பலாங்கொடைடில்ானின் பிரதான சகா என்பதுடன், இலங்கையில் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளியாகவும் பாரியளவிலான போதைப்பொருள் கடத்தல் காரனாகவும் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

தொடங்கொடைபொலிஸ் பிரிவுக்குட்பட்ட தொடங்கொட அதிவேக நெடுஞ்சாலையின் வெளியேறும் வாயிலுக்கு அருகில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பிலேயேசந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார். (05)

# நிலங்களை ஆக்கிரமிப்பதற்காக காடுகளுக்கு தீமூட்டும் கும்பல்

நிலங்களை ஆக்கிரமிப்பதற்காக திட்டமிட்ட குழுக்கள் இந்த வருடம் மாத்திரம் 25 ஆயிரம் ஏக்கர் வனங்களை தீக்கிரையாக்கியுள்ளன என சூழல் ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர்.

தபோவ வனப்பகுதியில் 50 ஏக்கர் வனம் தீக்கிரையாக்கப்பட்டுள்ளதாக சூழல் ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர்.

வரட்சியான காலப்பகுதியிலேயே இந்த குழுக்கள் காடுகளை தீக்கிரையாக்குகின்றன என நில மற்றும் விவசாய சீர்திருத்தத்துக்கான இயக்கத்தின் சஜீவ சாமிகரதெரிவித்துள்ளார்.

வலயங்களில் திட்டமிட்ட குழுக்கள் காடுகளுக்குத் தீமூட்டுகின்றன எனவும் அரசாங்கம் எடுத்துள்ள தவறான கொள்கைகளால் இவ்வாறான நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த வருட ஆரம்பத்தில் அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி காடுகளில் உள்ள நிலங்களை 11 மாவட்டங்களைசேர்ந்த பொதுமக்களுக்கு வழங்குவதற்கான அமைச்சரவை பத்திரத்தை சமர்ப்பித்தார். ஆனால் இந்த நிலங்களை பல்வேறு தனியார் நிறுவனங்களுக்கு வழங்க அரசாங்கம் விரும்புகின்றது என தெரிவித்துள்ள சாமிகர, அரசாங்கம் இதற்கான சூழ்நிலையை ஏற்படுத்த அரசாங்கம் முயல்கின்றது எனவும் தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை தீர்மானத்தின் பின்னரே காடுகள் தீப்பிடிக்கும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன எனவும் அவர் தெரிவித்துள்ளார் காடுகளுக்கு தீவைத்த 145 சம்பவங்கள் பெப்ரவரிக்கு பின்னர் இடம்பெற்றுள்ளன எனவும் அவர்தெரிவித்துள்ளார். (05)

# மின்சாரம், எரிபொருள், சுகாதாரத் துறைகள் அத்தியாவசிய சேவைகளாக தொடர்கின்றன

## வர்த்தமானியும் வெளியீடு

*2023 ஆம் ஆண்டு ஒகஸ்ட் 17ஆம்திகதிமுதல் பல துறைகளின் அத்தியாவசிய சேவைகளின் பிரகடனத்தை நீடிக்கும் அதிவிசேட வர்த்தமானியை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வெளியிட்டுள்ளார்.*

*1979 ஆம் ஆண்டின் இலக்கம் 61 இன் அத்தியாவசிய பொதுச் சேவைகள் சட்டத்தின் 2 ஆவது பிரிவின்படி அவருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ் வர்த்தமானி வெளியிடப்பட்டது. இது தொடர்பான வர்த்தமானி அறிவிப்பு ஏப்ரல் 17, 2023 முதல் அமுல்படுத்தப்பட்டது. அதன்படி, மின்சாரம்,பெற்றோலியம் மற்றம் எரிபொருள் விநியோகம், அஞ்சல் சேவைகள், வைத்தியசாலைகள், தனியார் வைத்தியசாலைகள், மருந்தகங்கள் அதுபோன்ற ஏனைய நிறுவனங்கள் போன்றவற்றில் இடம்பெறும் அனைத்துசேவைவேலை அல்லது உழைப்பு பராமரிப்பு வரவேற்பு கவனிப்பு உணவு மற்றும் சிகிச்சை தொடர்பான அனைத்தும் அத்தியாவசிய சேவைகளாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாக வர்த்தமானி அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (05)*




OKAYA
ELECTRIC VEHICLES
dsl
We lead the way...!
பெட்ரோல் பைக்குகளை பயன்படுத்துவதை
விட 77% இலாபமான பாவனைக்கு
The inEVitable
Future of Smart Mobility
FAAST-F4
140-160 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்
FAAST-F2T
80-85 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்
FREEDOM
70-75 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்
Rs.550,000/- இருந்து
வண்ணத்தெரிவுகள்:
இந்தியாவில் வேகமாக வளர்ந்து
வரும் மின்சார வாகனம்
2 வருட உத்தரவாதம்
3 இலவச சேவைகள்
conditions apply*
Visit DSL EV Experience Center : # 525, Union Place Colombo 02
Hotline - 070 300 9555

காலைக்கதிர் Kalaikkathir

## மூன்று...

(இரண்டாம்பக்கத்தொடர்ச்சி)

ளப்படுகிறன. மாவட்ட அளவிலான சேவைகள் மத்திய அரசின் கீழ் மேற்கொள்ளப்படுகிறன. இந்த சேவைகளை வழங்கும் போதுஅதிகாரப்போட்டியின்றி கூட்டாக முன்னெடுக்கப்பட வேண்டும்.

தற்போதுநாடுமுழுவதும் உணவுப்பாதுகாப்புதிட்டத்தை அமுல்படுத்தியுள்ளோம். அதன்படி, எதிர்வரும் பெரும் போகத்தில் அதிக விளைச்சல் கிடைக்கும் என எதிர்பார்க்கிறோம். மேலும், மக்களின் ஊட்டச்சத்து குறைபாடு கடந்த ஆண்டை விட குறைவாக இருந்தாலும், அதில் திருப்தி அடைய முடியாது. அஸ்வெசும திட்டம் நாட்டுமக்களின்ஊட்டச்சத்துக் குறைபாட்டைக் குறைக்க வழிவகுத்துள்ளது.

குறிப்பாக நாடாளுமன்றம் அடுத்த வருட இறுதிவரை செயற்படும் என்பதால்நாடாளுமன்றஉறுப்பினர்களுக்கும் மாகாணசபை நிர்வாக செயற்பாடுகளில் இணைவதற்கு வாய்ப்பு வழங்கப்பட வேண்டும். ஆளுநருடன் இணைந்து செயல்பட விசேட ஆலோசனைக்குழுவைநியமிக்கவும் எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை, அரசமைப்பின் 13ஆவது திருத்தம் தொடர்பான மாகாண சபை அதிகாரங்கள் தொடர்பிலும் ஆராயப்பட்டு வருகின்றது. குறிப்பாக, கல்வி, தொழில் பயிற்சி மற்றும் அந்தந்த மாகாணங்களில் புதிய பல்கலைக்கழகங்களைநிறுவுதல் ஆகிய பணிகளிலும் கவனம்செலுத்தப்பட்டுள்ளது.

சுற்றுலாத்துறையை மேம்படுத்தும் வகையில் மாகாண மட்டத்தில் சுற்றுலா சபைகளைநிறுவத்திட்டமிடப்பட்டுள்ளது. முதலீட்டாளர்கள் மற்றும் வர்த்தகர்களை ஊக்குவிக்கும் வகையில் பல வேலைத்திட்டங்கள் எதிர்காலத்தில் மாகாண மட்டத்தில் முன்னெடுக்க எதிர்பார்க்கப்படுகிறது. - என்றார்.

அதேவேளை, மத்திய அரசாங்கத்துடன் பணியாற்றும்போது மாகாண சபைகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத்தீர்வுகளைவழங்க ஜனாதிபதி அலுவலகம் ஒத்துழைப்புவழங்கதயாராக இருப்பதாக ஜனாதிபதியின் செயலாளர்சமன்ஏக்கநாயக்க இதன்போது தெரிவித்தார்.

இங்கு கருத்துத் தெரிவித்த மாகாண ஆளுநர்கள், மாகாண சபைக்குட்பட்ட அதிகார எல்லையில் காணப்படும் ஆசிரியர் வெற்றிடங்களைஉடனடியாக நிரப்ப வேண்டியதன் அவசியத்தை ஜனாதிபதியிடம் எடுத்துரைத்தனர்.

சில பாடசாலைகளில் மேலதிகமாக ஆசிரியர்கள் உள்ளதை சுட்டிக்காட்டிய ஆளுநர்கள், சில பாடசாலைகளில் ஆசிரியர் வெற்றிடங்கள் காணப்படுவதாக தெரிவித்ததோடு, ஆசிரியர் பரிமாற்றத் திட்டத்தின் மூலம் அதனை சீராக்க சந்தர்ப்பம் வழங்குமாறும் கோரிக்கை விடுத்தனர்.

'அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை' என்ற கருத்திட்டத்தின் கீழ் பாடசாலைகளில்நிர்மாணிக்கப்பட்ட இரண்டு மாடிக் கட்டிடங்கள், கட்டி முடிக்கப்படாமல் இடைநடுவில் கைவிடப்பட்டுள்ளதால்சிலகட்டிடங்கள் சேதமடைந்துவருவதாகவும், அவற்றைசீர்செய்வதற்கான பணிகளை முன்னெடுக்க வேண்டுமெனவும் ஆளுநர்கள் சுட்டிக்காட்டினர்.

இடைநடுவில் கைவிடப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களைச் செயற்படுத்த நிதி ஒதுக்கப்பட்ட போதிலும், சில திட்டங்களுக்கு இதுவரை நிதி கிடைக்கப்பெறவில்லை எனவும் அவர்கள் குறிப்பிட்டனர்.அத்துடன், மாகாண மட்டத்தில் சுற்றுலாத்துறையை மேம்படுத்த சந்தர்ப்பம் வழங்குமாறும் மாகாண ஆளுநர்கள் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்தனர்.

# கராப்பிட்டிய வைத்தியசாலையில் சிறுவர்களுக்கான இதயக்குழாய் சிகிச்சைக்கு வைத்தியர்கள் இல்லை

காலி கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில்சேர்க்கப்பட்டுள்ள சிறுவர்களுக்கான இதய குழாய் சிகிச்சைப் பிரிவுக்கு விசேட வைத்தியர் இல்லாத காரணத்தால் நோயாளர்கள் கொழும்பு லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலைக்கு பரிசோதனைகளுக்காக இடமாற்றம் செய்யப்படுகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. குறித்த நேரத்தில் இந்தப் பரிசோதனைகளை மேற்கொள்ளாததால் நோயாளிகளின் உயிருக்கு ஆபத்து ஏற்படக்கூடிய அபாய நிலை காணப்படுவதாகவும் கூறப்படுகிறது. இது தொடர்பில் கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவிக்கையில், சிறுவர் இருதய குழாய் சிகிச்சை பிரிவில் இருந்த இரு வைத்தியர்களில் ஒருவர் நாட்டைவிட்டு வெளிநாடு சென்றுள்ள நிலையில் மற்றைய வைத்தியர் தற்போது பயிற்சிக்காக சென்றுள்ளார் எனக் கூறியுள்ளார். (05)



## தெல்லிப்பழை துர்க்கை மகோற்சவம் கொடியேற்றத்துடன் நேற்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், தெல்லிப்பளை துர்க்கை அம்மன் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் நேற்று (வெள்ளிக்கிழமை) காலை 10 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. அந்த வகையில் தொடர்ந்து 12 நாள்களுக்கு இந்த மகோற்சவ திருவிழாக்கள் இடம்பெறவுள்ள நிலையில் எதிர்வரும் 28 ஆம் திகதி காலை தேர்த்திருவிழாவும், மறுநாள் தீர்த்ததிருவிழாவும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

## இலங்கை- பிரித்தானியா நட்புறவுக் குழுவின் புதிய செயலாளராக எம்.ஏ.சுமந்திரன் தெரிவு

கடந்த வாரம் இலங்கை - பிரித்தானியா நட்புறவுக் குழுவானது புதிப்பிக்கப்பட்டது.

இந்நிலையில் இந்த நட்புறவுக்குழுவின் புதிய செயலாளராக தமிழரசுக்கட்சியின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய எம்.ஏ. சுமந்திரன் தெரிவு செய்யப்பட்டார்.


இந்தக் கூட்டத்தில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர். (05)

## வாகன அடிச்சட்ட இலக்கங்களை மீளப் பொறிக்க யாழில் நடவடிக்கை

யாழ்.மாவட்ட மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்தால், சேதமடைந்த அல்லது தெளிவற்ற வாகன அடிச்சட்ட இலக்கங்களை மீள பொறிக்கும் நடவடிக்கை எதிர்வரும் 25 ஆம் மற்றும் 26 ஆம் திகதிகளில் முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்நிலையில் தேவைப்பாடு உடையோர், தமது மோட்டார் வாகனப் பதவுச் சான்றிதழ் மற்றும் அடையாள அட்டை என்பவற்றுடன் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் முற்பதிவுகளை மேற்கொண்டு, குறித்த திகதிகளில் வாகன அடிச்சட்ட இலக்கங்களைமீளப்பொறித்துக்கொள்ள முடியும்எனயாழ்.மாவட்டசெயலாளர் அறிவித்துள்ளார்.(05)

## மின் உற்பத்தி நிலையங்களுடன் தொடர்புடைய நீர்த்தேக்கங்களின் நீர் கொள்ளளவு அடிமட்டத்தில்



மின் உற்பத்தி நிலையங்களுடன் தொடர்புடைய நீர்த்தேக்கங் களின் கொள்ளளவு தற்போது 23 சதவீதமாகக் குறைந்துள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

ரந்தெனிகலவின் கொள்ளளவு 8.1 சதவீதமாகவும் விக்டோரியா நீர்த்தேக்கத்தின் கொள்ளளவு 27 சதவீதமாகவும் குறைந்துள்ளது.

சமனல ஏரி நீர்த்தேக்கத்தின் கொள்ளளவும் மொத்த கொள்ளளவு 1.9 சதவீதமாக குறைந்துள்ளது.

இத்தகைய நிலைமைகளின் கீழ், இந்த நாட்டின் மின்சாரத் தேவையில் 80 சதவீதம் நிலக்கரி மற்றும் அனல் மின்சாரம் மூலம் வழங்கப்படுகிறது.

இதேவேளை, 100 மெகாவோட் மின்சாரத்தை 6 மாதகாலத்துக்குகொள்வனவு செய்வதற்கு இலங்கை மின்சார சபைக்கு இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழு அனுமதி வழங்கியுள்ளது. (05)

## நாரஹேன்பிட்டியவில் கொக்கெயினுடன் பிலிப்பைன்ஸ்வாசி கைது

கொழும்பு, நாரஹேன்பிட்டி பகுதியில் 2 கிலோவுக்கும் அதிகமான கொக்கேயின் போதைப்பொருளுடன் பிலிப்பைன்ஸ் பிரஜை ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். இதேவேளை, பிலிப்பைன்ஸ் பிரஜையிடமிருந்து போதைப் பொருளை பெற்றுக்கொள்ள வந்த நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்பு பணியக அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் நாரஹேன்பிட்டி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியிலுள்ள விடுதி ஒன்றில் சுங்கப் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவினருடன் இணைந்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 2 கிலோ 294 கிராம் கொக்கேயினுடன் பிலிப்பைன்ஸ் பிரஜை கைது செய்யப்பட்டார் எனப் பொலி-ஸார் தெரிவித்தனர்.

தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட விசாரணையின்போது போதைப்பொருள் பெற்றுக்கொள்வதற்காக குறித்த விடுதிக்கு காரில் வந்த நபர் ஒருவரும் 07 லட்சம் ரூபா பணத்துடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

வெளிநாட்டில் உள்ள முக்கிய போதைப்பொருள் வியாபாரி ஒருவரின் அறிவுறுத்தலின் பேரில் அவர் இந்த போதைப்பொருளை பெற்றுக்கொள்வதற்கு வந்துள்ளார் என விசாரணையில் தெரியவந்துள்ளதாகப் பொலி-ஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட 28 வயதான பிலிப்பைன்ஸ் பிரஜை மாளிகாகந்த நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்க உத்தரவுபெறப்பட்டுள்ளதுடன், மற்றைய சந்தேக நபர் கிருலப்பனை பிரதேசத்தைச் சேர்ந்த 49 வயதுடையவர் எனவும் அவர் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளார். சம்பவம் தொடர்பில் சுங்கப் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவு மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளது. (05)

## இந்து – பௌத்த மதக் கலவரத்தை தடுக்க சட்ட நடவடிக்கை எடுங்கள்

### சரத் வீரசேகர நீதியமைச்சரிடம் இப்படி கோருகிறார்



குருந்தூர் மலை விவகாரத்தை அடிப்படையாகக் கொண்டு தோற்றம் பெறும் இனமுரண்பாட்டை தடுக்க அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பதை நீதியமைச்சரிடம் வலியுறுத்தியுள்ளேன்.

தொல்பொருள்மரபுரிமைகளை முன்னிலைப்படுத்தி தோற்றம் பெற்றுள்ள இருதரப்பு முரண்பாடுகள் குறித்து தேசியபாதுகாப்புதொடர்பான நாடாளுமன்ற துறைசார் மேற்பார்வை குழுவில் ஆராய எதிர்பார்த்துள்ளேன் என அக்குழுவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.

குருந்தூர் மலையில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற பொங்கல்வழிபாடு தொடர்பில் வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள பௌத்த மரபுரிமைகளை அழிப்பதற்கு ஒரு தரப்பினர் திட்டமிட்ட வகையில் செயற்படுகின்றனர்.

குருந்தூர் விகாரையில் உள்ள பௌத்த மத புராதன சின்னங்கள் தமிழ் அரசியல்வாதிகளின் ஆதரவுடன் அழிக்கப்பட்டுள்ளன.

குருந்தூர் மலையில் இந்து மத வழிபாடுகளில் ஈடுபடலாம் என முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி அனுமதி வழங்கியமை குறித்து நீதிச்சேவை ஆணைக்குழுவின் ஆலோசனைகளை பெற்றுக் கொள்ளவுள்ளோம்.

குருந்தூர் மலையில் மத வழிபாடுகளில் ஈடுபடும் போது முரண்பாடுகள் தோற்றம் பெறலாம் என முல்லைத்தீவு பொலிஸார் நீதிமன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்கள்.

குருந்தூர் மலையில் இந்து வழிபாடுகள் இடம் பெற்ற நிலையில் கொழும்பில் இருந்து 500 இற்கும் அதிகமான சிங்களவர்கள் குருந்தூர் மலைக்கு சென்றனர். இருதரப்பினருக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஊடாக முரண்பாடுகள் தோற்றம் பெறலாம்.

குருந்தூர் மலை விவகாரத்தை அடிப்படையாகக் கொண்டு தோற்றம் பெறும் இனமுரண்பாட்டை தடுக்க அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பதை நீதியமைச்சரிடம் வலியுறுத்தியுள்ளேன்.

நாட்டில் இனங்களுக்கு இடையில் மீண்டும் இன முரண்பாட்டை தோற்றுவிக்க ஒரு தரப்பினர் முயற்சிக்கிறார்களா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தொல்பொருள் மரபுகளை முன்னிலைப்படுத்தி தோற்றம்பெற்றுள்ள முரண்பாடுகள் குறித்து தேசிய பாதுகாப்பு தொடர்பான நாடாளுமன்ற துறைசார் மேற்பார்வை குழுவில் ஆராய எதிர்பார்த்துள்ளேன். - என்றார். (05)

# பெரமுனவை பிளவுபடுத்தினால் அரசாங்கம் பலவீனமடையுமாம்

### தடுமாறுகிறார் ரோஹித அபேகுணவர்தன



ஸ்ரீ லங்கா பொது ஜன பெரமுனவை பிளவுப்படுத்த ஜனாதிபதி முயற்சித்தால் அது அரசாங்கத்துக்கு எதிர் மறையான தாக்கங்களை ஏற்படுத்தும்.

பொதுஜன பெரமுனவுக்கு எதிரான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுமாயின் அதற்கு எதிராகக் கடுமையான நடவடிக்கைகளை முன்னெடுப்போம் என ஆளும் தரப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் முன்னாள் அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்தார். சமகால அரசியல் நிலை வரம் தொடர்பில் வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவில் இருந்து விலகி நாடாளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படும் தரப்பினரை ஒன்றிணைத்து புதிய அரசியல் கூட்டணியை உருவாக்கும் அரசியல் காய்நகர்த்தல் ஒன்று இடம் பெறுவதை நன்கு அறிவோம்.

நாடாளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படும் தரப்பினருக்கும், பொதுஜன பெரமுனவுக்கும் இடையில் எவ்விததொடர்பும் கிடையாது.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவில் இருந்து விலகி நாடாளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படும் தரப்பினர் புதிய அரசியல் கூட்டணி அமைப்பதால் எமக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாது.

பொதுஜன பெரமுனவுக்கு எதிராக கடந்த காலங்களில் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ, உதயகம்மன்பில ஆகியோரை உள்ளடக்கி ஹெலிகொப்டர் சின்னத்தில் உருவாக்கப்பட்ட புதிய கூட்டணி கால வோட்டத்தில் காணாமலாக்கப்பட்டது.

ஸ்ரீ லங்கா பொது ஜன பெரமுனவை பிளவுப்படுத்த ஜனாதிபதி முயற்சித்தால் அது அரசாங்கத்துக்கு எதிர் மறையான தாக்கங்களை ஏற்படுத்தும்.

பொதுஜனபெரமுனவின் 134 உறுப்பினர்கள் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமைத்துவத்தின் கீழ்தான் இன்றும் செயற்படுகிறார்கள்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நாங்களே தெரிவு செய்தோம். ஆகவே அவர் பொதுஜன பெரமுனவுடன் பேச்சில் ஈடுபட்டு அரச நிர்வாகத்தை முன்னெடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ளோம்.

ஜனாதிபதி தலைமையில் எதிர்வரும் வாரம் இடம் பெறவுள்ள ஆளுங்கட்சி உறுப்பினர் கூட்டத்தின்போது இந்த விடயங்கள் குறித்து பேச்சில் ஈடுபடுவோம். - என்றார். (05)

## பால் உற்பத்தி பாதிப்பு அடைவு



நிலவும்வறட்சியான காலநிலையால் உள்நாட்டுபால்உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், இது தொடர்பான அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்குமாறு கால்நடை பிரிவுக்கு விவசாய அமைச்சர் பணிப்புரை விடுத்துள்ளார்.

வறட்சியான காலநிலையை கருத்திற் கொண்டு கால்நடை வளர்ப்பில் ஏற்பட்டுள்ள பாதிப்புகளை குறைத்துக் கொள்ள முன்னெடுக்க வேண்டிய திட்டங்கள் தொடர்பில் ஆராய்வதற்காக அமைச்சர் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது. (05)

## இலங்கையில் எதிர்வரும் வருடங்களில் கடும் குடிநீர் நெருக்கடி ஏற்படலாமாம்

### மேத்திக்கா விதானகே எச்சரிக்கை



இலங்கை எதிர்வரும் வருடங்களில் பாரிய குடிநீர் பிரச்சினையை எதிர் கொள்ளும் என ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைகழகத்தின் சிரேஸ்ட விரிவுரையாளர் மேத்திக்கா விதானகே எச்சரித்துள்ளார்.

அரசாங்கம் இதனை எதிர்கொள்வதற்கான திட்டமொன்றை முன்னெடுக்கவேண்டும் என அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

காலநிலை மாற்றமே குடிநீர்தட்டுப்பாட்டுக்கான முக்கிய காரணாக காணப்படும் என அவர்தெரி வித்துள்ளார்.

இலங்கையின் மழை வீழ்ச்சி காலங்களில் ஏற்கனவே மாற்றங்கள் தென்படத் தொடங்கிவிட்டன என அவர் குறிப்பிட்டுள்ளார்.

வழமையாகவருடாந்தம் இலங்கையில் 2500 மில்லிலீற்றர்மழைபெய்யும்மேமுதல் செப்ரெம்பர்வரையானகாலப் பகுதியே அதிகளவு மழைக்காலம் என தெரிவித்துள்ள அவர், காலநிலை மாற்றம் காரண மாக மேமாதத்தில் மாத்திரம் 2500 மில்லிலீற்றர் மழைபெய்யலாம் நாங்கள் இதனை எதிர்கொள்ள தயாராகயிருக்கவேண்டும் என குறிப்பிட்டுள்ளார்.

குடிநீர்தட்டுப்பாடுஎன்பது தவிர்க்கமுடியாதது குறிப்பாக உயர்வலயங்களில் என அவர்தெரிவித்துள்ளார்.(05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 19.08.2023இல் வெளியிடப்பெற்றது.